பக்கங்கள்:-19

# காலை முரசு

முழக்கம்: 01 | வள்ளுவர் ஆண்டு 2054 | கார்த்திகை 01 | சனிக்கிழமை | 18.11.2023 | அதிர்வு 109

## லான்சாவின் புதிய கூட்டணி: கொழும்பில் இரகசியப் பேச்சு

### 25 எம்.பிக்கள் பங்கேற்பு

நாடாளுமன்ற உறுப்பினர் நிமல் லான்சா உருவாக்கி வரும் கூட்டணியின் நகர்வுகள் மிகவும் இரகசியமான முறையில் இடம் பெற்று வருகின்றன என்று தகவல்கள் வெளியாகியுள்ளன. 06

# ‘ஏ 9’ இற்கு நெருக்கமாக சீனித் தொழிற்சாலை அமைக்க புது முயற்சி

### இடத்தை மாற்றும் நகர்வுகள் ஆரம்பம்

(ந.லோகதயாளன்)

வவுனியா வடக்கில் அமைக்க அனுமதி பெற்ற - சர்ச்சைக்குரியதான - சீனித் தொழிற்சாலையைத் தற்போது வவுனியா நகர பிரதேச செயலாளர் பிரிவின் ‘ஏ 9’ பாதையோரத்துக்குச் சற்று நெருக்கமாகப் பிறிதொரு இடத்தில் அமைப்பதற்கு விண்ணப்பிக்கப்பட்டுள்ளது. 06

## யாழ். பொஸ்கோவில் 162 மாணவர்கள் சித்தி




(ந.லோகதயாளன்)

2023 ஆம் ஆண்டுக்கான தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில் யாழ்ப்பாணம் புனித ஜோன் பொஸ்கோ வித்தியாலயத்தில் 162 மாணவர்கள் வெட்டுப் புள்ளியைத் தாண்டி சித்தி பெற்றுள்ளனர்.

இந்தத் தகவலை யாழ். புனித ஜோன் பொஸ்கோ வித்தியாலய சமூகத்தினர் ஊடகங்களிடம் தெரிவித்துள்ளனர்.

## அநுரவுடன் இந்தியத் தூதர் கொழும்பில் முக்கிய பேச்சு

### சமகால அரசியல் நிலைமை தொடர்பில் அலசல்



தேசிய மக்கள் சக்தியின் தலைவர் அநுரகுமார திஸாநாயக்கவுக்கும் இலங்கைக்கான இந்தியத் தூதுவர் கோபால் பாக்லேவுக்கும் இடையில் நேற்றுப் பிற்பகல் முக்கிய சந்திப்பு இடம்பெற்றது.

கொழும்பிலுள்ள இந்திய உயர் ஸ்தானிகராலயத்தில் 06

## யாழ். இந்துவில் 161 மாணவர்கள் இம்முறை சித்தி




(ந.லோகதயாளன்)

தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில் யாழ்ப்பாணம் இந்து ஆரம்பப் பாடசாலையில் 161 மாணவர்கள் சித்தி பெற்றுள்ளனர்.

யாழ். இந்து ஆரம்பப் பாடசாலையில் இருந்து இம்முறை 266 மாணவர்கள் பரீட்சைக்குத் தோற்றிய 06

## ‘பட்ஜட்’டில் மக்களுக்கு சலுகைகள் உள்ளனவாம்

### பஸில் சொல்கின்றார்



2024 ஆம் நிதியாண்டுக்கான வரவு - செலவுத் திட்டத்தில் மக்களுக்குச் சலுகைகள் உண்டு என்று ஸ்ரீலங்கா 06

## மொட்டுவின் ஜனாதிபதி வேட்பாளர் உரிய நேரத்தில் அறிவிக்கப்படுவார்

### தனது பிறந்தநாள் நிகழ்வில் மஹிந்த



உரிய நேரத்தில் ஜனாதிபதி வேட்பாளரை ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன அறிவிக்கும் என்று அக்கட்சியின் தலைவரும் முன்னாள் ஜனாதிபதியுமான மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்தார்.

தனது 78 ஆவது பிறந்தநாளை முன்னிட்டு கம்பஹா மாவட்டத்திலுள்ள கர்ப்பிணித் தாய்மார்களுக்கு மதிய உணவு மற்றும் சுகாதாரப் பொருள்கள் அடங்கிய 06




நாட்டின் அரசமைப்புக் கவுன்ஸில் மீண்டும் ஒரு நெருக்கடியை - குழப்பத்தை - சந்திக்கின்றது.

உயர்நீதிமன்றத்தில் மதிக்கப்பட்ட ஒரு நீதியரசரான புவனேக அலுவிகார தற்போது ஓய்வில் சென்றுள்ளார்.

அந்த இடத்துக்கு ஒரு நீதியரசர் நியமனம் செய்யப்பட வேண்டும். இது தொடர்பில் ஜனாதிபதியின் பரிந்துரையை ஆலோசித்து, அங்கீகரிப்பது அரசமைப்புக் 06

# பொருளாதாரப் பாதிப்புக்கு ராஜபக்ஷக்கள் மாத்திரமல்லர் ரணில் விக்கிரமசிங்கவும் பொறுப்புக்கூறத்தான் வேண்டும்



## விமல் வீரவன்ஸ சபையில் தெரிவிப்பு

**“சட்டப் புத்தகத்தில் உள்ள விடயங்களை குறிப்பிட்டு பொருளாதார பாதிப்பு தொடர்பில் உயர் நீதிமன்றம் வழங்கியுள்ள தீர்ப்பில் இருந்து விடுபட வேண்டாம். பொருளாதார பாதிப்புக்கு ராஜபக்ஷக்கள் மாத்திரமல்லர், தற்போதைய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவும் பொறுப்புக் கூற வேண்டும்.”**

**- இவ்வாறு தேசிய சுதந்திர முன்னணியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான விமல் வீரவன்ஸ தெரிவித்தார்.**

நாடாளுமன்றத்தில் நேற்று இடம்பெற்ற அமர்வின் போது விசேட கூற்றை முன்வைத்து உரையாற்றுகையில் அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

“பொருளாதாரப் பாதிப்பு தொடர்பில் உயர்நீதிமன்றம் வழங்கியுள்ள தீர்ப்புத் தொடர்பில் அமைச்சர் பந்துல குணவர்தன சபையில் கருத்து தெரிவிக்கிறார். சட்டப் புத்தகத்தில் உள்ள விடயங்களை குறிப்பிட்டுக் கொண்டு நீதிமன்றத்தின் தீர்ப்பில் இருந்து விடுபட முயற்சிக்க வேண்டாம்.

எழுதப்பட்டுள்ள சட்டங்கள் முழுமையாக செயற்படுத்தப்படுவதில்லை என்பதற்கு இரண்டு உதாரணங்களை குறிப்பிடுகிறேன். கிரிக்கெட் நிறைவேற்று குழுவை நீக்கி இடைக்கால குழுவை அமைச்சர் ரொஷான் ரணசிங்க நியமித்தார்.

அமைச்சரால் நியமிக்கப்பட்ட இடைக்கால குழு தொடர்பில் ஆராய ஜனாதிபதி இடைக்காலக் குழுவை நியமித்தார். குழுவின் பரிந்துரையைத் தொடர்ந்து இனி வரும் காலங்களில் அமைச்சரவையின் அனுமதி இல்லாமல் இடைக்கால குழுக்களை நியமிக்க முடியாது என தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது. ஆனால் சட்டத்தில் அவ்வாறு குறிப்பிடப்படவில்லை.

முன்னாள் ஜனாதிபதி கோட்டபய ராஜபகக்ஷவின் ஆட்சியின் போது இந்தியாவுக்கான இலங்கைத் தூதுவர் மிலிந்த மொரகொட “ரூபாவின் பெறுமதியை தளம்பல் நிலைக்கு முழுமைப்படுத்துங்கள். அப்போது தான் இந்தியா அடுத்தக்கட்ட கடனுதவியை வழங்கும்” என்றார் .

இவ்விடயம் தொடர்பில் கோட்டபய ராஜபக்ஷ மத்திய வங்கியின் முன்னாள் ஆளுநர் இந்திரஜித் குமாரசுவாமி “ஆம் அது நல்லது“ என்று குறிப்பிட்டார். இவ்விடயத்தை கோட்டபய ராஜபக்ஷ அமைச்சரவைக்கு அறிவிக்கவில்லை. குறைந்தபட்ச அளவேனும் இருந்திருந்தால் அவர் அதனை நாடாளுமன்றத்துக்கு அறிவித்திருப்பார். ஆனால் அறிவிக்கப்படவில்லை.

2015 ஆம் ஆண்டு நல்லாட்சி அரசாங்கத்தின் காலப்பகுதியில் அப்போதைய பிரதமர் ரணில் விக்கிரமசிங்க சர்வதேச பிணைமுறியங்களிடமிருந்து 13 பில்லியனுக்கும் அதிகமான கடன் பெற்றார். இதன் தாக்கம் பிற்பட்ட அரசாங்கத்துக்கும் செல்வாக்கு செலுத்தியது. ஆகவே பொருளாதார பாதிப்புக்கு ராஜபக்ஷக்களைப் போல் தற்போதைய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவும் பொறுப்புக் கூற வேண்டும்” – என்றார்.

# பொருளாதார பாதிப்புக்கு காரணமானவர்கள் களனி விகாரையில் மன்னிப்பு கோர வேண்டும்

## அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவிப்பு



**“பொருளாதார பாதிப்புக்காக ஆட்சியில் இருந்த அனைவரும் களனி விகாரைக்கு சென்று மன்னிப்பு கோர வேண்டும்.”**

**- இவ்வாறு போக்குவரத்து, ஊடகத்துறை மற்றும் நெடுஞ்சாலைகள் அபிவிருத்தி அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவித்தார்.**

நாடாளுமன்றத்தில் நேற்று இடம்பெற்ற 2024 ஆம் ஆண்டுக்கான வரவு – செலவு திட்டத்தின் இரண்டாம் வாசிப்பின் மீதான விவாதத்தில் உரையாற்றும் போது அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

”பொருளாதாரப் பாதிப்புக்கு ராஜபக்ஷர்கள் பொறுப்புக் கூற வேண்டும் என்று குறிப்பிடப்படுகிறது. முன்னாள் ஜனாதிபதி கோட்டபய ராஜபக்ஷ, முன்னாள் நிதியமைச்சர்களான மஹிந்த ராஜபக்ஷ, பஷில் ராஜபக்ஷ ஆகியோர் வரவு – செலவுத் திட்டத்தை தயாரிக்கவில்லை.

நிதியமைச்சின் அதிகாரிகள், மத்திய வங்கியின் அதிகாரிகள் ஆகியோர் தான் வரவு – செலவுத் திட்டத்தை சமர்ப்பித்தார்கள்.

பொருளாதார பாதிப்புக்கு ஒரு தரப்பினர் மாத்திரம் பொறுப்புக் கூற வேண்டும், மன்னிப்பு கோர வேண்டும் என்று ஒரு தரப்பினர் குறிப்பிடுகிறார்கள்.

பொருளாதாரப் பாதிப்பை அரசியல் நோக்கத்துடன் ஆராய முடியாது. 2003 ஆம் ஆண்டுக்கு பின்னர் ஆட்சியில் இருந்த அனைவரும் பொருளாதாரப் பாதிப்புக்கு பொறுப்புக் கூற வேண்டும். களனி விகாரைக்கு சென்று மன்னிப்பு கோர வேண்டும்.

ஒரு சில அரச அதிகாரிகள் வழங்கிய தவறான ஆலோசனைகளால் முழு அரசியல் கட்டமைப்பும் பாதிக்கப்பட்டது. முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவிடம் ஒரு தரப்பினர் சீனிக்கான வரிச்சலுகை வழங்குமாறு கோரினார்கள்.

அவர் இவ்விடயம் தொடர்பில் துறைசார் நிபுணர்களிடம் வினவினார். அப்போது அவர்கள் “சீனிக்கான வரிச்சலுகை வழங்கினால் தேநீர்,பாண், பணிஸ் உட்பட வெதுப்பக உணவுகளின் விலை குறைவடையும்“ என்றார்கள். இதன் பின்னர் கோட்டாபய ராஜபக்ஷ வரிச்சலுகை வழங்கினார்.

பொருளாதார பாதிப்புக்கு பொறுப்புக் கூற வேண்டும் என்று குறிப்பிடப்படும் முன்னாள் ஜனாதிபதியின் செயலாளர் பி.பி ஜயசுந்தர 12 ஆண்டுகள் திறைசேரியின் செயலாளராகவும், 12 ஆண்டுகள் மத்திய வங்கியின் நாணய சபை உறுப்பினராகவும் பதவி வகித்தார். ஆட்சிக்கு வரும் சகல தலைவர்களையும் இவர் வசியம் செய்து வசப்படுத்தியிருந்தார். அவரது ஆலோசனைக்கு அப்பாற்பட்டு எவராலும் செயற்பட முடியாத நிலையே காணப்பட்டது” – என்றார்.


வடமாகாண மரநடுகை மாதம்
கார்த்திகை 01 - 30, 2023
"ஒரு தேசமாக நிலைத்திருக்க, ஒரு மாநிலமாக வளர, மக்களாக வாழ எங்களிடம் மரங்கள் இருக்க வேண்டும்."
தியோடர் ரூஸ்வெல்ற் - அமெரிக்காவின் 26ஆவது ஜனாதிபதி
ஆளுக்கொரு மரம் நடுவோம்
நாளுக்கொரு வரம் பெறுவோம்
கார்த்திகையில் மரநடுகை தேசத்தை மாத்திரமல்ல;
தமிழ்த் தேசியத்தின் ஆன்மாவையும் குளிரச்செய்யும்!
தமிழ்த் தேசியப் பசுமை இயக்கம்


AIRPORT PICKUP & DROP
COLOMBO - JAFFNA
WEDDING SERVICE
DAY RENTING
KDH
VAN FOR RENT A/C
Make Your Ride Better
CALL NOW
+94 773 776 882
+94 753 770 230



# லக்விஜய மின் உற்பத்தி நிலையத்தின் இரண்டாம் மின்பிறப்பாக்கி செயலிழப்பு

தொழில்நுட்பக் கோளாறு காரணமாக நுரைச்சோலை லக்விஜய மின் உற்பத்தி நிலையத்தின் இரண்டாம் மின் பிறப்பாக்கியைச் செயலிழக்கச் செய்வதாக இலங்கை மின்சார சபை தெரிவித்துள்ளது.

மின் உற்பத்தி நிலையத்தின் இரண்டாவது மின்பிறப்பாக்கியில் ஏற்பட்ட திடீர் கோளாறு காரணமாக, மின் உற்பத்தியை நிறுத்த வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளதாக இலங்கை மின்சார சபை தெரிவித்துள்ளது.

அதன்படி, நுரைச்சோலை மின் உற்பத்தி நிலையத்தின் இரண்டு மின் பிறப்பாக்கிகள் தற்போது செயலிழந்துள்ளன.

மின் உற்பத்தி நிலையத்தின் மூன்றாவது மின் பிறப்பாக்கி பராமரிப்பு பணிக்காக ஏற்கனவே அனுப்பப்பட்டுள்ளது.

எனினும், மின்சார விநியோகத்தில் எவ்வித இடையூறும் இல்லை என மின்சார சபை தெரிவித்துள்ளது.

பராமரிப்பு காலத்தில், அதிகபட்சமாக நீர் மின்சாரத்தை உற்பத்தி செய்து, தொடர்ந்து மின்சாரம் வழங்க முயற்சி மேற்கொள்ளப்படும் எனவும் இலங்கை மின்சார சபை தெரிவித்துள்ளது.



# இம்மாதத்தில் முதல் 15 நாள்களில் மட்டும் 75 ஆயிரம் சுற்றுலாப் பயணிகள் வருகை

கொழும்பு, நவ. 18

இந்த மாதத்தின் முதல் 15 நாள்களில் மாத்திரம் 74 ஆயிரத்து 664 சுற்றுலாப் பயணிகள் நாட்டுக்கு வருகைத்தந்துள்ளனர் என சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை தெரிவித்துள்ளது.

இதன்படி, இந்த வருடத்தின் இது வரையான காலப்பகுதியில் நாட்டுக்கு வருகைத்தந்த சுற்றுலாப் பயணிகளின் மொத்த எண்ணிக்கை 12 லட்சத்து 119 ஆக அதிகரித்துள்ளது.

தொடர்ந்தும் இந்தியாவில் இருந்து வருகைத்தரும் சுற்றுலாப்பயணிகளின் எண்ணிக்கை அதிகரித்து வருவதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

இதன்படி, இந்த மாதத்தின் முதல் 15 நாள்களில் இந்தியாவில் இருந்து வருகை தந்த சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை 13 ஆயிரத்து 491 ஆகப் பதிவாகியுள்ளது.



# பிரதமர் தினேஷ் குணவர்தனவின் தலைமையில் 2,519 தாதியருக்கு நியமனம் வழங்கும் நிகழ்வு



பிரதமர் தினேஷ் குணவர்தன தலைமையில் நேற்று அலரிமாளிகையில் இடம்பெற்ற நிகழ்வில் 2,519 தாதியர்கள் அரச சுகாதார சேவையில் இணைத்துக் கொள்ளப்பட் டனர்.

பிரதமர் மற்றும் சுகாதார அமைச்சர் ரமேஷ் பத்திரன வால் தாதியர்களுக்கு நியமனம் வழங்கி வைக்கப்பட்டது.

இந்த நிழ்வில் சுகாதார அமைச்சர் ரமேஷ் பத்திரன உரையாற்றினார். இதன்போது அவர் மேலும் தெரிவிக் கையில் –

“தாதியர் தொழிலைப் பொறுத்தமட்டில், எனது வாழ் நாளில் லஞ்சம், ஊழல், மோசடி, முறைகேடுகள் பற்றி எந்த முறைப்பாடுகளையும் கேட்டதில்லை. உலகிலுள்ள சகல தொழில்களிலும் தாதியர் என்பது மறுக்க முடியாத ஒரு சிறந்த தொழிலாகும். அந்தச் சிறப்பைப் பாதுகாப்பது உங்கள் பொறுப்பாகும்.

1948 ஆம் ஆண்டில், பதிவு செய்யப்பட்ட வைத்தியர்கள் உட்பட 400 வைத்தியர்களுடன் ஆரம்பிக்கப்பட்ட எமது சுகாதாரத்துறையில் சுமார் 300 தாதியர்கள் இருந்தனர். 75 வருடங்களில் இலங்கையின் சுகாதாரத் துறையானது 43 ஆயிரம் தாதிகள், 23 ஆயிரம் வைத்திய அதிகாரிகள் மற்றும் 8 ஆயிரம் துணை வைத்தியர்கள் உட்பட ஒரு லட்சம் பேரைக் கொண்ட பாரிய துறையாக வளர்ச்சியடைந்துள்ளது.

இத்துறை சிறந்த சேவைகளை வழங்கும் தொழில்சார் சேவையாக மாறியுள்ளதுடன், அதன் பரிணாம வளர்ச் சியுடன், குறைந்த செலவில் உலகில் சிறந்த தரமான சுகா தார சேவைகளை வழங்கும் மத்திய நிலையமாக இன்று இலங்கை அடிக்கடி உலக சுகாதார ஸ்தாபனத்தினால் குறிப் பிடப்படுகின்றது. சேவை மற்றும் சுகாதார ஊழியர்களின் ஒத்துழைப்பு அந்த பெருமைக்கு உரியதாகும்.” – என்றார்

# சாதாரண தரப் பரீட்சை பெறுபேறு ஒரு மாதத்திற்குள் வெளியிடப்படும்

கொழும்பு, நவ. 18

கல்விப் பொதுத் தராதர சாதாரண தரப் பரீட்சையின் பெறுபேறுகள் ஒரு மாதத்திற்குள் வெளியிடப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் இதனை தெரிவித்துள்ளார்.

இந்த பரீட்சை பெறுபேறுகளை **www.doenets.lk** என்ற பரீட்சைகள் திணைக்களத்தின் உத்தியோகப் பூர்வ இணையத்தளத்தில் பார்வை யிட முடியும் என்று அறிவிக்கப்பட்டுள் ளது.

இதேவேளை, தரம் 05 புலமைப் பரிசில் பரீட்சை பெறுபேறுகள் தொடர் பான விடைத்தாள் மீள் பரிசீலனைக்கு விண்ணப்பங்களை ஏற்கும் காலம் அறிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கை பரீட்சைகள் திணைக்க ளம் விடுத்துள்ள அறிக்கையில், எதிர் வரும் 27ஆம் திகதி முதல் டிசம்பர் 4ஆம் திகதி வரையில் பரீட்சார்த்திகள் தமது மேன்முறையீட்டை சமர்ப்பிக்க முடியும் எனத் தெரிவிக்கப்பட்டுள் ளது.

நிகழ்நிலை முறையில் குறித்த விண் ணப்பங்களை அனுப்பி வைக்குமாறு இலங்கை பரீட்சைகள் திணைக்களம் குறிப்பிட்டுள்ளது.

2023 ஆம் ஆண்டுக்கான தரம் 05 புலமைப்பரிசில் பரீட்சை பெறுபேறுகள் நேற்று முன்தினம் இரவு வெளி யிடப்பட்டிருந்தன.

# புலமைப்பரிசில் பரீட்சையில் சித்திபெற்ற மாணவருக்குக் கொடுப்பனவு அதிகரிப்பு

தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடையும் மாணவர்களுக்கு வழங் கப்படும் மாதாந்த கொடுப்பனவை அதிக ரிக்குமாறு எதிர்க்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்கள் கல்வி அமைச்சரி டம் நேற்று கோரிக்கை விடுத்துள்ள னர்.

புலமைப்பரிசில் பெறுபேறுகள் தொடர் பாக கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த நேற்று நாடாளுமன்றத்தில் கருத்து தெரிவித்த போதே இந்த கோரிக்கை முன்வைக்கப்பட்டது.

புலமைப்பரிசில் பெறும் மாணவர் களுக்கு மாதாந்தம் வழங்கப்படும் 750 ரூபாவை 1000 ரூபாவாக அதிகரிக்க வேண்டுமென நாடாளுமன்ற உறுப் பினர் டலஸ் அழகப்பெரும கோரி னார்.

புலமைப்பரிசில் பெறுவோரின் எண்ணிக்கை 20,000-இல் இருந்து 30,000 ஆக அதிகரிக்கப்பட வேண் டுமென அவர் கோரிக்கை விடுத்துள்ளார்.

இது தொடர்பில் கவனம் செலுத்தப் பட்டுள்ளதாக கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த தெரிவித்துள்ளார்.

இம்முறை கல்வி அமைச்சுக்கு ஒதுக் கப்பட்டுள்ள ஒதுக்கீட்டை சேமித்து இதற்கு தேவையான நடவடிக்கைகள் மேற் கொள்ளப்படும் எனவும் அவர் குறிப் பிட்டார்.

புதிய கல்வி சீர்திருத்தத்தின் கீழ், மாணவர்களுக்கு அழுத்தங்கள் ஏற்ப டாத வகையில், புலமைப்பரிசில் பரீட் சையை இலகுபடுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த குறிப்பிட்டார்.

## இரகசியம் பரகசியம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)
கவுன்ஸிலின் பொறுப்பு.

வழமையாக, உயர்நீதிமன்றத்தில் ஓரிடம் வெற்றிடமாகும் போது மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் சிரேஷ்ட நிலையில் இருக்கும் நீதியரசரை அல்லது சட்டமா அதிபர் திணைக்களத்தில் சொலிஸிற்றர் ஜெனரல் பதவி தரத்தில் இருப்பவரை அல்லது சட்டத்துறையில் சிரேஷ்ட உயர் நிலையில் சட்டத்தரணியாகப் பிரகாசிக்கும் ஒருவரை ஜனாதிபதி பரிந்துரைப்பார். அந்தப் பெயரை அரசமைப்புக் கவுன்ஸில் அங்கீகரிக்கும். அது வழமை.

அதேபோல, தற்போது மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் தலைமை நீதியரசராக இருக்கும் நிஸங்க பந்துல கருணாரட்ணவின் பெயரை ஜனாதிபதி பரிந்துரைத்திருக்கின்றமைதான் சர்ச்சையை ஏற்படுத்தி உள்ளது. போன வாரம் வெள்ளிக்கிழமை இலங்கைக் கிரிக்கெட் நிர்வாகம் தொடர்பான விவகாரம் நாடாளுமன்றத்தில் விவாதிக்கப்பட்ட போது, இலங்கைக் கிரிக்கெட்டை நிர்வகிக்க விளையாட்டுத் துறை அமைச்சரால் அறிவிக்கப்பட்ட இடைக்கால நிர்வாகத்தை இடைநிறுத்தி உத்தரவு பிறப்பித்த மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் தலைமை நீதியரசர் நிஸங்க பந்துல கருணாரட்ண குறித்து நாடாளுமன்றத்தில் பிய்த்து உதறப்பட்டது. அவரின் நடவடிக்கைகள், செயற்பாடுகள் மோசமாக விமர்சிக்கப்பட்டன.

அவரின் பெயரையே இப்போது உயர்நீதிமன்ற நீதியரசர் வெற்றிடத்திற்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பரிந்துரைத்திருக்கின்றமை அரசமைப்புக் கவுன்ஸிலின் அங்கத்தவர்களிடையே கடும் அதிருப்தியை ஏற்படுத்தி இருப்பதாகத் தெரிகின்றது.

வழமையாக இத்தகைய பரிந்துரையுடன் சம்பந்தப்பட்ட நபர் தொடர்பில் பிரதம நீதியரசரின் நற்சான்றுக் கடிதமும் இடம்பெற்றிருக்கும். ஆனால் இப்போது மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் தலைமை நீதியரசர் நிஸங்க பந்துல கருணாரட்ண விடயத்தில் ஜனாதிபதியின் பரிந்துரையோடு பிரதம நீதியரசரின் பரிந்துரை காணப்படவில்லை. ஆகவே, இந்த நியமனம் தொடர்பில் பிரதம நீதியரசரின் கருத்தை அறிய அரசமைப்புக் கவுன்ஸில் நேற்றுத் தீர்மானித்திருப்பதாகத் தெரிகின்றது.

அது தொடர்பில் பிரதம நீதியரசரின் கருத்தைக் கோரும் கடிதம் ஒன்றை அரசமைப்பு கவுன்ஸிலின் தலைவரான சபாநாயகர் நேற்றே பிரதம நீதியரசருக்கு அனுப்பி வைத்தார் என அறிய வந்தது.

அவரின் பதிலைப் பெற்று, அதன் பின் இன்று மீண்டும் கூடி ஆராய்ந்து, ஒரு முடிவை அரசமைப்புக் கவுன்ஸில் எடுக்கும் என்று தெரிகின்றது.

ஜனாதிபதியின் இந்தப் பரிந்துரையை நிராகரித்து, புதிய பிறிதொரு பரிந்துரையைத் தருமாறு கோரும் முடிவை அரசமைப்புக் கவுன்ஸில் இன்று எடுத்தாலும் ஆச்சரியப்படுவதற்கு இல்லை என்பதுதான் நிலைமை.

## லான்சாவின் புதிய...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)
எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலை இலக்குவைத்து தற்போதைய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவாகப் பாரிய கூட்டணியொன்றை உருவாக்கும் முயற்சியில் நாடாளுமன்ற உறுப்பினர் நிமல் லான்சா ஈடுபட்டு வருகிறார்.

புதிய கூட்டணிக்கான அலுவலகம் கூட அண்மையில் இராஜகிரியவில் திறக்கப்பட்டுள்ளது என்று தகவல்கள் வெளியாகியிருந்தன.

புதிய கூட்டணியில் இணைந்துள்ள அனைத்து அரசியல் கட்சிகளும் எதிர்வரும் தேர்தலில் ஒன்றிணைந்து பாரிய அரசியல் சக்தியாக உருவெடுக்க வேண்டும் என்ற தொனியிலேயே லான்சாவின் நகர்வுகள் உள்ளன.

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன, ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி, ஐக்கிய மக்கள் சக்தி உட்பட பல்வேறு கட்சிகளுடன் நிமல் லான்சா தலைமையிலான குழு பரந்துபட்ட பேச்சுகளில் ஈடுபட்டு வருகின்றது.

இந்நிலையில், கூட்டணி தொடர்பில் இறுதி உடன்பாட்டை எட்டுவதற்கான முக்கிய சந்திப்பு கடந்த புதன்கிழமை கொழும்பில் உள்ள ஐந்து நட்சத்திர ஹோட்டல் ஒன்றில் நடைபெற்றுள்ளது.

இந்தக் கூட்டம் மிகவும் இரகசியமாகத் திட்டமிட்டு நடத்தப்பட்டுள்ளது. கூட்டத்தில் சில நாடாளுமன்ற உறுப்பினர்கள் மாத்திரமே பங்கேற்க அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

அவர்களின் பாதுகாப்பு அதிகாரிகளுக்குக் கூட அருகில் இருக்க அனுமதி மறுக்கப்பட்டுள்ளது.

புதிய கூட்டணிக்கு ஆதரவளிக்கத் தயாராகவுள்ள அரசியல் கட்சிகளைப் பிரதிநிதித்துவப்படுத்தி 25 எம்.பிக்கள் வரை இந்தச் சந்திப்பில் கலந்துகொண்டுள்ளனர்.

இந்தக் கூட்டத்தில் பேசப்பட்ட எதையும் பகிரங்கப்படுத்தக் கூடாது என்ற தீர்மானமும் எடுக்கப்பட்டுள்ளது.

எதிர்வரும் ஜனவரி முதல் தமது பணிகளைத் தொடங்கக் கூட்டணியின் உறுப்பினர்கள் முடிவுகளை எடுத்துள்ளனர் என்று அறியமுடிகின்றது.

இதற்கிடையில், புதிய கூட்டணியின் அரசியல் குழு அண்மையில் நாடாளுமன்ற வளாகத்தில் கூடியுள்ளது.

அமைச்சர்களான மஹிந்த அமரவீர, நிமல் சிறிபாடி சில்வா, நளின் பெர்னாண்டோ, லசந்த அழகியவண்ண, ஜகத் புஷ்பகுமார, அநுர பிரியதர்ஷன யாப்பா, நிமல் லான்சா, பிரியங்கர ஜயரத்ன மற்றும் கட்சி அலுவலகத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் குழுவினரும் இந்தச் சந்திப்பில் கலந்துகொண்டுள்ளனர்.

இதன்போது தற்போதைய அரசியல் விவகாரங்கள் மற்றும் வரவு – செலவுத் திட்டம் குறித்து பேசப்பட்டன என்றும் தெரியவருகின்றது.

## யாழ். இந்துவில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)
நிலையில் 161 மாணவர்கள் வெட்டுப் புள்ளியைத் தாண்டி சித்தி பெற்றுள்ளனர்.

இந்தத் தகவலை பாடசாலை சமூகத்தினர் ஊடகங்களிடம் தெரிவித்துள்ளனர்.

## பட்ஜட்டில் மக்களுக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)
பொதுஜன பெரமுனவின் நிறுவுநரும் முன்னாள் நிதி அமைச்சருமான பஸில் ராஜபக்ஷ தெரிவித்தார்.

அவர் மேலும் கூறுகையில்,

“கட்சி என்ற ரீதியில் வரவு – செலவுத் திட்டத்தை ஆதரிப்பதா? இல்லையா? என்ற முடிவை எதிர்வரும் தினங்களுக்குள் கூடி முடிவெடுக்கவுள்ளோம்.

மக்களுக்கு நிவாரணம் வழங்க வரியைக் குறைத்தாலும் எம்மைப் பிழை என்கின்றனர். அதிகரித்தாலும் பிழை என்கின்றனர். ஆனால், எதிர்காலத்தில் எந்தவொரு வரியையும் குறைக்க முடியாத நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளோம்.” – என்றார்.

## அநுரவுடன் இந்தியத்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)
நடைபெற்ற இந்தச் சந்திப்பின்போது இலங்கையின் தற்போதைய அரசியல் நிலைமை மற்றும் நாடு தற்போது எதிர்நோக்கி வரும் பொருளாதார நெருக்கடி குறித்து நீண்ட நேரம் இருவரும் கலந்துரையாடினர்.

இந்தச்சந்திப்பில் இந்திய உயர்ஸ்தானிகராலயத்தின் முதன்மைச் செயலாளர் எல்டோஸ் மேத்யூவும் கலந்துகொண்டார்.

அதேவேளை, தேசிய மக்கள் சக்தியின் தேசிய செயற்குழு உறுப்பினர் விஜித ஹேரத்தும் சந்திப்பில் கலந்துகொண்டமை குறிப்பிடத்தக்கது.

## ‘ஏ 9’ இற்கு நெருக்கமாக...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)
வவுனியா மாவட்டத்தின் வவுனியா வடக்குப் பிரதேச செயலாளர் பிரிவில் நயினாமடுப் பகுதியில் ஒரு சீனித் தொழிற்சாலை அமைக்க முதலீட்டு அமைச்சின் ஊடாக 200 ஹெக்டேயர் நிலத்துக்கு அமைச்சரவை அனுமதி பெறப்பட்டு, அதற்கான இடங்கள் தேர்வு செய்யப்பட்டு, சாத்தியவள ஆய்வுகள் இடம்பெற்றன.

இந்த ஆய்வில் நயினாமடுப் பகுதியில் அடையாளம் காணப்பட்ட மத்திய வகுப்புத் திட்டக் காணியின் அருகே ஆக இரு குளங்கள் மட்டுமே உள்ளமை கவனத்தில் எடுக்கப்பட்டது. அத்தோடு அந்தப் பிரதேசம் வவுனியா நகரின் மத்தியில் இருந்து சுமார் 48 கிலோ மீற்றர் தொலைவில் உள்ளதால், அங்கு சீனித் தொழிற்சாலை ஆரம்பிப்பதாயின் அப்பகுதியில் அதிக அபிவிருத்திப் பணிகளையும் மேற்கொள்ள வேண்டிய நிலைமை ஏற்படும் என்று சுட்டிக்காட்டப்பட்டது என அறியவந்தது.

இதன்காரணமாக வவுனியா பிரதேச செயலாளர்பிரிவின்கீழ் உள்ள இளமருதங்குளம், சேமமடு மற்றும் மாளிகை உள்ளடக்கிய முக்கோண வடிவிலான பகுதியில் சீனித் தொழிற்சாலையை அமைக்க 200 ஹெக்டேயர் நிலம் வழங்குமாறு தொழிற்சாலை நிர்வாகத்தால் வவுனியா நகரப் பிரதேச செயலகத்துக்கு இப்போது எழுத்தில் விண்ணப்பிக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு சீனித் தொழிற்சாலைத் தரப்பினால் பிரதேச செயலாளரிடம் கோரப்பட்டுள்ள நிலப் பகுதி வனவளத் திணைக்களத்தின் ஆளுகையில் உள்ள பிரதேசம் என்பதால் வவுனியா பிரதேச செயலாளர் அது தொடர்பில் வவுனியா மாவட்ட வனவளத் திணைக்களத்தின் கவனத்துக்குக் கொண்டு சென்றுள்ளார் என்று அறியவந்தது.

சீனித் தொழிற்சாலைத் தரப்பினரால் தற்போது கோரப்படும் பிரதேசம் “ஏ 9” வீதியில் இருந்து ஆக 8 கிலோ மீற்றர் தொலைவில் அமைந்துள்ளது. அத்தோடு சீனித் தொழிற்சாலையை அங்கு செயற்படுத்துவதற்கு வசதியாக அந்தப் பிரதேசத்தில் அருகருகே ஐந்து குளங்கள் காணப்படுகின்றமையும், வவுனியா நகரில் இருந்து ஆக 22 கிலோ மீற்றர் தூரத்தில் அந்தப் பிரதேசம் உள்ளமையும் முக்கிய விடயங்களாகச் சுட்டிக்காட்டப்படுகின்றன.

## மொட்டுவின் ஜனாதிபதி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)
பொதிகளை மஹிந்த ராஜபக்ஷ நேற்று வழங்கிவைத்தார்.

கம்பஹா மாவட்ட செயலகத்தில் நடைபெற்ற இந்த நிகழ்வில் கலந்துகொண்ட பின்னர் ஊடகங்களுக்குக் கருத்து வெளியிடும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

“எதிர்காலத்தில் எந்தத் தேர்தல் நடைபெற்றாலும் எமது கட்சியே வெற்றி பெறும். தேர்தல்களை எதிர்கொள்ள ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன தயார் நிலையிலேயே உள்ளது.

ஜனாதிபதித் தேர்தல் எப்போது நடைபெறும் என்று எமக்குத் தெரியாது. எனினும், உரிய நேரத்தில் ஜனாதிபதி வேட்பாளரை அறிவிப்போம்.” – என்றார்.

# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்
259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com

## குடியுரிமைப் பறிப்பு சாத்தியமற்றது

நாட்டின் பொருளாதாரப் பாதிப்புகளுக்குக் காரணமானவர்கள் என உயர் நீதிமன்றத்தினால் அடையாளம் காணப்பட்டவர்களின் குடியுரிமையைப் பறிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ நாட்டின் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவைக் கோரி இருக்கின்றார்.

அதிகாரத்தைத் துஷ்பிரயோகம் செய்து, நாட்டுக்குக் கேடு விளைவிப்பவர்களின் குடியுரிமையைப் பறித்துத் தண்டிக்கும் நடவடிக்கை இலங்கைக்குப் புதியதல்ல.

அதற்கான ஒழுங்குமுறைகள், சட்ட ஏற்பாடுகள் இலங்கையின் அரசமைப்பிலும் சட்டங்களிலும் தெளிவாக உள்ளன. அவற்றின் படி, குடியுரிமையைப் பறிக்கும் நடவடிக்கைகளும் இடம்பெற்றிருக்கின்றன.

இப்போது குடியுரிமையைப் பறிக்கும்படி கோரும் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸவும், அக்கோரிக்கையை அவர் முன்வைக்கும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவும் இந்தக் குடியுரிமையைப் பறிக்கும் பாரம்பரியத்துடன் சம்பந்தப்பட்டவர்கள்தான்.

அப்படிக் குடியுரிமையைப் பறிக்கும் சட்ட ஏற்பாடுகளை அரசமைப்பிலும், மற்றைய சட்டங்களிலும் கொண்டு வந்தது ஜே.ஆர். ஜெயவர்தன தலைமையிலான ஐ.தே.கட்சி அரசு தான். அந்தக் கட்சியிலிருந்து வந்தவர்கள் தான் இந்த சஜித்தும், ரணிலும் கூட.

தான் கொண்டு வந்த இந்தச் சட்ட ஏற்பாடுகளைப் பயன்படுத்தித் தமது அரசியல் எதிரிகளை பழிவாங்கும் திட்டத்தைச் செம்மையாக முன்னெடுத்தவர் அரசியலில் 'கிழட்டு நரி'யான ஜனாதிபதி ஜே.ஆர்.ஜெயவர்தன.

1980 இல், அதற்கு முன்னர் பிரதமராக இருந்த ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கா, அவரது அரசில் நிதி மற்றும் நீதி அமைச்சராக இருந்த பீலிக்ஸ் டயஸ் பண்டாரநாயக்க, பௌசி, ஜலால்தீன் போன்றோரின் குடியுரிமையை ஏழு ஆண்டுகளுக்குப் பறித்தார் ஜே.ஆர்.ஜெயவர்தன. அதனால் ஸ்ரீமாவோ பண்டாரநாயக்க தமது எம்.பி. பதவியை இழந்தார். அடுத்த ஏழு ஆண்டுகள் நேரடி தேர்தல் அரசியலில் ஈடுபட முடியாமல் அவர் தள்ளி வைக்கப்பட்டார். 1982 இல் நடந்த நிறைவேற்றதிகார ஜனாதிபதிக்கான முதல் தேர்தலில் தமக்கு எதிராகப் பலமான எதிரியாக ஸ்ரீமாவோ நிற்க முடியாத நிலைமையை அதன் மூலம் ஏற்படுத்தி, அத்தேர்தலில் சுலபமாக வென்றார் ஜெயவர்தனா.

அந்த ஜெயவர்தனாவின் மருமகனும், அரசியல் வாரிசுமான ரணில்தான் இப்போது ஜனாதிபதி. ஸ்ரீமாவோவின் குடியுரிமையைப் பறிக்கும் தீர்மானம் நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட போது நாடாளுமன்றத்தில் பிரதமராக இருந்தவர் இப்போதைய எதிர்க்கட்சி தலைவரான சஜித் பிரேமதாஸவின் தந்தையார் ரணசிங்க பிரேமதாஸதான். அவர், ரணில் விக்கிரமசிங்க எல்லோரும் சேர்ந்துதான் ஸ்ரீமாவோவின் குடியுரிமையைப் பறிக்கும் அந்தக் கேவல வேலையை ஒப்பேற்றினர்.

இப்போது அந்த வேலையை மீண்டும் ஒரு தடவை செய்ய முன்வருமாறு ரணிலுக்கு அழைப்பு விடுக்கின்றார் சஜித்.

ஆனால் இன்றைய அரசியல் நிலைமையில் அப்படி அரசியல் பிரமுகரின் குடியுரிமையைப் பறிப்பது அவ்வளவு சுலபமானதல்ல. அதற்காக ஒரு விசேட ஜனாதிபதி ஆணைக்குழு உரிய அதிகாரங்களுடன் ஜனாதிபதியால் நியமிக்கப்பட வேண்டும். அந்த ஆணைக்குழு சம்பந்தப்பட்ட பிரமுகரின் அரசியல்துஷ்பிரயோகநடவடிக்கைகுறித்து விசாரித்து, அவர் மீது குற்றம் காண வேண்டும். அந்தக் குற்றத்தின் அடிப்படையில் சம்பந்தப்பட்ட நபரின் குடியுரிமையைப் பறிப்பதற்கு அந்த ஆணைக்குழு பரிந்துரைக்க வேண்டும். அந்தப் பரிந்துரையை நாடாளுமன்றம் மூன்றில் இரண்டு பங்கு பெரும்பான்மையுடன் நிறைவேற்ற வேண்டும்.

அன்று அப்படி இவற்றை எல்லாம் செய்வதற்கு நாடாளுமன்றத்தில் ஆறில் ஐந்து பங்கு ஆதரவை ஜெயவர்தன தமது கையில் வைத்திருந்தார். ஆனால், இன்று ரணிலிடம் அத்தகைய ஆதரவுத்தளம் களத்தில் - நாடாளுமன்றத்தில் - இல்லை என்பது தெளிவு.

ஆகவே இப்போது நாட்டின் பொருளாதாரச் சீரழிவுக்கு காரணமானவர்கள் என்று உயர் நீதிமன்றம் அடையாளம் காட்டியோரின் குடியுரிமையை பறிப்பது என்பது சாத்தியப்படக் கூடிய ஒரு விடயமாகத் தோன்றவில்லை.

## வடமாகாண மரநடுகை மாதம் கார்த்திகை – 2023

"மரங்களைக் காற்றைச் சலவை செய்யும் இயந்திரங்களாகவும், குளிர்விக்கும் பதனப்படுத்திகளாகவும் சொல்லித்தரும் அறிவியலும், உயிர்காக்கும் மரங்களைப் பணங் ாய்ச்சி மரங்களாகப் போதிக்கும் பொருளியலும் ஆதிக்கம் பெற்றுள்ள நிலையில் மரங்களுக்கும் எமக்கும் இடையிலான பண்பாட்டு உறவை மீட்டுருவாக்கம் செய்வது அவசியம் ஆகும். இந்தப் பண்பாட்டு உறவே மரங்கள் மதீன பற்றுதலை வளர்க்கும்."



**பொ.ஐங்கரநேசன் தலைவர் - தமிழ்த்தேசியப் பசுமை இயக்கம்**

# மஹிந்த, கோட்டா,பஸிலின் குடியுரிமையை பறிக்க ரணில் நடவடிக்கை எடுக்க வேண்டும்

## இப்படிக் கோருகின்றார் எதிர்க்கட்சித் தலைவர் சஜித்



நாட்டின் பொருளாதார நெருக்கடிக்கு காரணமாக இருந்தவர்களின் குடியுரிமையை பறிப்பதற்கான நடவடிக்கைகளை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க எடுக்க வேண்டுமென எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று உரையாற்றும் போதே எதிர்க்கட்சித் தலைவர் இவ்வாறு கோருனார்.

“நாட்டின் பொருளாதார நெருக்கடிக்குக் காரணமானவர்களாக மஹிந்த, பஸில், கோட்டா, ஆட்டிகல, கப்ரால் உட்பட 7 பேரின் பெயர்களை உயர்நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.

அவர்களால்தான் நாட்டின் பொருளாதாரம் வீழ்ச்சியடைந்துள்ளதாகவும் உயர்நீதிமன்றம் கூறியுள்ளது.

ஆகவே, இந்த விடயம் தொடர்பில் ஆராய விசேட ஜனாதிபதி ஆணைக்குழுவொன்றை ஜனாதிபதி நியமிக்க வேண்டும். அதற்கான அதிகாரம் அவருக்கு உள்ளது. இவர்களது குடியுரிமையை பறிக்க முடியும்”– என்றார்.

இதேவேளை, இலங்கையைப் பொருளாதார நெருக்கடிக்குள் தள்ளியவர்களது குடியுரிமைகளைப் பறிப்பதற்கு விசேட பிரேரணையொன்றை அனைத்துக் கட்சிகளும் ஒன்றிணைந்து நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்க வேண்டும் என ஐக்கிய மக்கள் சக்தியின் வெலிகம தொகுதியின் பிரதம அமைப்பாளர் றொஹான் ஜயவிக்ரம தெரிவித்துள்ளார்.

நாட்டின் முறையற்ற பொருளாதார முகாமைத்துவத்திற்கும், சீரற்ற நிதி நிர்வாகத்திற்கும் முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, முன்னாள் பிரதமர் மற்றும் நிதி அமைச்சர் மஹிந்த ராஜபக்ஷ, பஸில் ராஜபக்ஷ உள்ளிட்டவர்கள் பொறுப்புக் கூற வேண்டும் என உயர் நீதிமன்றம் கடந்த 14ஆம் திகதி தீர்ப்பளித்திருந்தது.

உயர் நீதிமன்றின் பிரதம நீதியரசர் ஜயந்த ஜயசூரிய தலைமையிலான ஐவர் கொண்ட நீதியரசர்கள் குழாம், இந்தத் தீர்ப்பை அளித்தது.

அதில் குறித்த மூவருக்கும் மேலதிகமாக, மத்திய வங்கியின் முன்னாள் ஆளுநர்களான அஜித் நிவாட் கப்ரால், டப்ளியூ.டி. லக்ஷ்மன், நிதி அமைச்சின் முன்னாள் செயலாளர் எஸ்.ஆர். ஆட்டிகல, முன்னாள் ஜனாதிபதி செயலர் பி.பீ. ஜயசுந்தர, மத்திய வங்கியின் நிதிச் சபை ஆகியனவும் இந்த பொருளாதார நெருக்கடி நிலைமைக்குப் பொறுப்புக் கூற வேண்டும் என உயர்நீதிமன்றின் தீர்ப்பில் கூறப்பட்டுள்ளது.

மூன்று பல்கலைக்கழக புத்திஜீவிகள், இலங்கையைச் சேர்ந்த நீச்சல் வீரரும் பயிற்றுவிப்பாளருமான ஜூலியன் பொல்லிங், இலங்கை வர்த்தகப் பேரவையின் முன்னாள் தலைவர் சந்திர ஜயரத்ன, ட்ரான்ஸ் பேரன்ஸி இன்டர்நெஷனல் அமைப்பு மற்றும் ஜெஹான் கனகரத்ன ஆகியோரால் இந்த அடிப்படை உரிமை மீறல் மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டிருந்தன.

# இரட்டை சிசுக்களில் ஒன்றுடன் தாயும் சாவு ஒரு சிசு பிழைத்தது

## திருகோணமலையில் சம்பவம்

(எஸ்.கீதபொன்கலன்)

இரட்டை குழந்தைகளைப் பிரசவிக்க தயாராக இருந்த எட்டுமாத கர்ப்பிணித்தாயும் பிள்ளை ஒன்றும் உயிரிழந்துள்ள சம்பவம் நேற்று முன்தினம் திருகோணமலை வைத்தியசாலையில் இடம்பெற்றுள்ளது.

மூதூர், இக்பால் வீதியைச் சேர்ந்த – இரட்டை குழந்தைகளைப் பிரசவிக்க தயாராக இருந்த – எட்டுமாத இளம் கர்ப்பிணித்தாய் ஒருவர் சென்ற நேற்று முன்தினம் மாதாந்த மகப்பேற்று பரிசோதனைக்காக திருகோணமலை தனியார் வைத்தியசாலை ஒன்றில் ஸ்கான் பரிசோதனையை மேற்கொண்டபோது ஒரு குழந்தை உயிரிழந்துள்ளதாக வைத்தியர் தெரிவித்தமையுடன் அவரின் பணிப்புரைக்கு அமைவாகஅந்தத் தாய் வைத்தியசாலைக்கு உடனடியாக கொண்டு செல்லப்பட்டபோதிலும் வழியில் உயர் குருதி அழுத்தம் காரணமாக மயக்கம் அடைந்துள்ளார்.

பின்னர் வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டு, அவசர சிகிச்சைப் பிரிவில் சேர்க்கப்பட்டு, சத்திர சிகிச்சை மேற்கொள்ளப்பட்ட போதிலும் தாயும் உயிரிழந்தமையுடன் ஒரு குழந்தை மட்டும் காப்பாற்றப்பட்டு, விசேட சிசு பராமரிப்புப் பிரிவிலன் கண்காணிப்பில் வைக்கப்பட்டுள்ளது. தாயின் மரணத்திற்கான முழுமையான காரணம் இன்னும் தெரியவராத நிலையில் உயர் குருதி அழுத்தம் காரணமாக இருக்கலாம் எனக் கூறப்படுகின்றது.

திருகோணமலையில் மகப்பேற்று வைத்தியர்களின் பற்றாக்குறை நிலவுவதாகவும் அண்மைக்காலமாக சிறந்த மருத்துவ ஆலோசனை கிடைக்காமையினால் சட்டரீதியான கருக்கலைப்பு, சிசுக்களின் உயிரிழப்பு சம்பவங்களும் அதிகமாக இடம்பெற்று வருகின்றன. சிறந்த வைத்திய சேவையைப் பெற்றுக் கொள்ள முடியாதுள்ளதாகப் பல தாய்மார்கள் கவலை வெளியிடுகின்றனர்.

# பாடசாலைகளில் ஆபத்தான நிலையில் உள்ள கட்டடங்கள் தொடர்பில் ஆராயப் பணிப்புரை

நாடளாவிய ரீதியில் பாடசாலைகளில் ஆபத்தான நிலையில் உள்ள கட்டடங்கள் தொடர்பில் ஆராய்ந்து உடனடியாக நடவடிக்கை எடுக்குமாறு கல்வி அமைச்சு, மாகாண கல்விப் பணிப்பாளர்களுக்கு அறிவித்துள்ளது.

இது தொடர்பில் வலயக் கல்விப் பணிப்பாளர்கள் பாடசாலை மட்டத்தில் ஆய்வுகளை முன்னெடுக்கவுள்ளதாக அமைச்சு தெரிவித்துள்ளது.

பாடசாலைகளில் ஆபத்தான நிலையில் உள்ள கட்டடங்கள் தொடர்பில் உடனடியாக நடவடிக்கை எடுத்து, மாணவர்களின் பாதுகாப்பை உறுதி செய்ய வேண்டும் என கல்வி அமைச்சு அறிவுறுத்தியுள்ளது.

வெல்லம்பிட்டி – வெஹரகொட கனிஷ்ட வித்தியாலயத்தில் தண்ணீர் குழாய்கள் பொருத்தப்பட்டிருந்த சுவர் இடிந்து வீழ்ந்ததில் மாணவி ஒருவர் உயிரிழந்ததை அடுத்து, பாடசாலைகளில் உள்ள ஆபத்தான கட்டடங்கள் மற்றும் இடங்கள் தொடர்பில் கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

இந்தச்சம்பவத்தில்மேலும்5மாணவர்கள் காயமடைந்தனர்.

இதேவேளை, சம்பவம் தொடர்பான விசாரணைகளை முன்னெடுக்க மேல் மாகாண ஆளுநர் றொஷான் குணதிலக்கவினால் குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# நாணய நிதியத்தின் இரண்டாம் கடன் உதவி டிசம்பர் மாதம் கிடைக்கும் என்று எதிர்பார்ப்பு

## அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா தெரிவிப்பு



**சர்வதேச நாணய நிதியத்தால் இலங்கைக்கு வழங்கப்பட்ட நீடிக்கப்பட்ட கடன் உதவியின் கீழ் இரண்டாவது தவணை டிசம்பர் மாதத்துக்குள் விடுவிக்கப்படும் என எதிர்பார்ப்பதாக துறைமுகங்கள், கப்பற்றுறை மற்றும் விமான சேவைகள் அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா தெரிவித்தார்.**

2024 ஆம் ஆண்டுக்கான ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவால் முன்வைக்கப்பட்ட வரவு – செலவுத் திட்டம் குறுகிய கால இலாப நோக்கமின்றி வீழ்ச்சியடைந்த தேசிய பொருளாதாரத்தை மீளக் கட்டியெழுப்புவதற்கான நீண்டகால வேலைத் திட்டத்தின் ஆரம்பமாகும் என்றும் அமைச்சர் குறிப்பிட்டார்.

ஜனாதிபதி ஊடக மையத்தில் நேற்று (17) நடைபெற்ற ஊடக சந்திப்பில் கருத்துத் தெரிவிக்கும்போதே அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா இவ்வாறு தெரிவித்தார்.

இங்கு மேலும் கருத்துத் தெரிவித்த அமைச்சர்,

“குறுகிய கால இலாப நோக்கம் இன்றி, வீழ்ச்சியடைந்துள்ள தேசிய பொருளாதாரத்தைக் கட்டியெழுப்புவதற்கான நீண்ட கால வேலைத்திட்டத்தின் மேலும் ஒரு ஆரம்பத்தையே இம்முறை முன்வைக்கப்பட்டுள்ள வரவு – செலவுத் திட்டம் எடுத்துக்காட்டுகின்றது. இந்த வரவு – செலவுத் திட்டத்தில் அதற்கு அவசியமான திட்டங்கள் உட்பட கொள்கைகள் மிகவும் தெளிவாக முன்வைக்கப்பட்டுள்ளன. ஒரு சிலர் இதனை தேர்தலுக்காக முன்வைக்கப்பட்ட வரவு – செலவுத் திட்டம் என்கின்றனர். ஆனால், இது அவ்வாறு தேர்தலை எதிர்பார்த்து சமர்ப்பிக்கப்பட்ட வரவு – செலவுத் திட்டம் அல்ல. அவ்வாறு தேர்தலுக்காக முன்வைக்கப்பட்ட ஒன்றாக இருந்தால், அபிவிருத்தி தொடர்பான அனைத்தையும் மறந்து பொருளாதார ரீதியில் மேற்கொள்ள வேண்டிய பாரிய தீர்மானங்களை எடுக்காமல், பொது மக்களுக்கு பணத்தை அச்சடித்தேனும் நிவாரணங்களை வழங்கியிருக்கும். இது அவ்வாறானதொரு வரவு – செலவுத் திட்டமல்ல.

கடந்த காலங்களில் ஏற்பட்ட பொருளாதார நெருக்கடி உட்பட மக்கள் போராட்டங்கள் போன்றவற்றால் நாட்டில் அரசியல் மற்றும் சமூக ஸ்தீரத் தன்மை இல்லாமல்போனது. அவ்வாறு அரசியல் மற்றும் சமூக ஸ்தீரத் தன்மை இல்லாமல் போன ஒரு நாட்டுக்கு நிதி உதவிகளோ, கடன் வசதிகளோ மற்றும் முதலீடுகளோ கிடைப்பதில்லை.

இவற்றை சரியாக முகாமைத்துவம் செய்ய அன்று இருந்த ஆட்சியாளர்களால் முடியவில்லை. அதனால் அவர்கள் பதவி விலகினர். அப்போது, அதனை முகாமைத்துவம் செய்யும் பொறுப்பை எதிர்க்கட்சிக்கு வழங்க நாங்கள் முன்வந்தோம். ஆனால், அவர்கள் அதனை ஏற்றுக்கொள்ளவில்லை.

அந்தச் சந்தர்ப்பத்திலே தான் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, இந்த கடினமான பொறுப்பை ஏற்றுக்கொண்டார்.

அவரின் கொள்கையை அவர் தெளிவாக முன்வைத்தார். குறுகிய கால, பிரபல்யமான வேலைத்திட்டங்கள் அன்றி, நீண்டகால அடிப்படையில் நாட்டைக் கட்டியெழுப்பும் திட்டங்களையே தான் செயற்படுத்தவதாக அவர் எடுத்துக்காட்டினார். இந்தக் கொள்கையுடன் நாட்டைக் கட்டியெழுப்பும் பயணத்தில் முன்னோக்கிச் செல்லும்போது மேலே குறிப்பிட்டவாறு பாரிய அளவில் மக்களுக்கு நிவாரணங்களை வழங்குவது குறித்து எதிர்பார்க்க முடியாது.

ஆனால், அவர் நிவாரணங்களையும் வழங்கியுள்ளார். தேசிய பொருளாதாரத்தைக் கட்டியெழுப்பும் வேலைத்திட்டத்தையும் செயற்படுத்தினார். அதே போன்று நாட்டின் அபிவிருத்திக்கு தடையாக இருந்த பல்வேறு விடயங்களை அகற்றி அபிவிருத்தியை நோக்கி நாட்டைக் கொண்டு செல்வதற்கு அவசியமான பின்புலத்தையும் இந்த வரவு செலவுத்திட்டத்தில் முன்வைத்துள்ளார்.

2024 வரவு – செலவுத் திட்டத்தில் எந்தவொரு நன்மையும் கிடைக்கவில்லை என்று சிலர் கூறுகின்றனர். அரச ஊழியர்களுக்கு சம்பள அதிகரிப்பு, முதியோர் மற்றும் அங்கவீனர் கொடுப்பனவு உயர்வு உட்பட கல்வி, சுகாதாரம், பிரதேச அபிவிருத்தி மற்றும் காணி உரிமைகள் உள்ளிட்ட பல்வேறு நிவாரணங்கள் மக்களுக்கு வழங்கப்பட்டுள்ளன.

இவை அனைத்தையும் வழங்க அரசுக்கு வருமானம் தேவை. நாம் செலவிடும் தொகைக்கு ஏற்ப வருமானத்தை நாம் ஈட்டிக்கொள்ள வேண்டும். அதுதான் வரவு – செலவுத் திட்டமாகும். அரசு பெரும்பாலும் வரி வருமானத்தில் இருந்துதான் இவ்வாறான நிவாரணக் கொடுப்பனவுகளை மேற்கொள்கின்றன.

எனவே, நாம் வரவு, செலவு என்ற இரண்டிலும் சமநிலையைப் பேண வேண்டும். அதிகமான நிவாரணங்களை வழங்க வேண்டுமாயின் வரி விதிப்புகளை உயர்த்த வேண்டியேற்படும். இந்தப் பொறிமுறையை மக்கள் புரிந்துகொள்ள வேண்டும். பத்தாயிரம் அதிகரித்தால் அதற்கு மேலதிகமாக கேட்கின்றனர். இந்த அடிப்படைப் பொருளாதார விடயங்களை நாம் தெரிந்து கொண்டே கேள்வி எழுப்ப வேண்டும். நடைமுறை ரீதியாக நாம் சிந்திப்போமாயின் அவை வெறும் அரச விரோத கோஷங்களாகும் என்பதைத் தெரிந்துகொள்ளலாம். அவை நடைமுறையில் சாத்தியமற்றவை என்பதை இன்று இந்நாட்டு மக்கள் புரிந்துகொண்டிருக்கின்றார்கள்.

நாம் குறித்த நேரத்தில் சர்வதேச நாணய நிதியத்திற்கு செல்லாமையே இந்த அனைத்து பொருளாதார நெருக்கடிகளுக்கும் காரணம் என்று எதிர்தரப்பினர் கூறினர். அவ்வாறு செல்லும்போது முக்கியமாக அவர்கள் இடும் நிபந்தனைகளை நாம் ஏற்றுக்கொண்டு நடைமுறைப்படுத்த வேண்டியேற்படும்.


நாடாளுமன்றத்தில் சர்வதேச நாணய நிதியத்துக்குச் செல்லுங்கள் என்றும் அவர்கள் கூறுகின்றனர். அதேபோன்று கடந்த அரசு பாரிய அளவில் வரி விலக்குகளை வழங்கியமையே பொருளாதார வீழ்ச்சிக்கு காரணம் என்றும் எதிர்த் தரப்பினர் கூறுகின்றனர். அப்படியென்றால் வரிகளை அதிகரிக்க வேண்டும் என்பதை அவர்களே ஏற்றுக்கொள்கின்றனர்.

அவ்வாறு வரி அதிகரிக்கப்படும் போதும் அதற்கு எதிராகக் கோஷங்களை எழுப்புகின்றனர். இவ்வாறு அவர்கள் இருவேறு முரண்பட்ட கருத்துக்களை முன்வைக்கின்றனர்.

சர்வதேச நாணய நிதியத்தின் இரண்டாம் தவணையும் மிக விரைவில் எமக்கு கிடைக்கவுள்ளது. எதிர்வரும் டிசம்பர் மாதமளவில் அது எமக்கு கிடைக்கும் என்று நான் எதிர்பார்க்கின்றேன். சர்வதேச நாணய நிதியத்தின் மூலம் எமக்கு கிடைக்கும் தொகையை விட அதன் ஊடாக ஏனைய கடன் வழங்குனர்களுக்கு எம்மீது எற்படும் நம்பிக்கையே எமக்கு மிக முக்கியம். அந்த நம்பிக்கையின் மூலம் ஏனைய சர்வதேச நிதி நிறுவனங்கள் எமது நாட்டுக்கு மீண்டும் அபிவிருத்திப் பணிகளுக்காக கடன் வழங்க முன்வருவதுடன் முதலீட்டாளர்கள் இலங்கையில் தமது முதலீடுகளைச் செய்யவும் முன்வருவார்கள். எமது கடன் மறுசீரமைப்புக்குப் பிறகு நாட்டில் தடைப்பட்டுள்ள அனைத்து அபிவிருத்திப் பணிகளையும் முன்னெடுக்க முடியும்.

நட்டத்தில் இயங்கிவந்த பல்வேறு அரச நிறுவனங்கள் இலாபமீட்டும் நிலைக்கு வந்துள்ளமை, தற்போது நாம் முன்னெடுக்கும் பொருளாதார வேலத்திட்டங்கள் வெற்றியடைந்து வருவதை எடுத்துக்காட்டும் ஒரு விடயமாகக் குறிப்பிடலாம். மேலும் தொடர்ந்து நட்டத்தில் இயங்கி வரும் அரச நிறுவனங்களை மறுசீரமைக்கும் பணிகளும் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. வட்டி வீதங்கள் குறைந்துள்ளன. அந்நியச் செலாவணிக் கையிருப்பு உயர்வடைந்துள்ளது. எரிபொருள் மற்றும் எரிவாயு தட்டுப்பாடுகள் தற்போது இல்லை. நாம் தற்போது பாரிய சவால்களை எதிர்கொண்டு அதில் இருந்து மீள்வதற்காக செயற்பட்டுக்கொண்டிருக்கின்றோம் என்பதை அனைவரும் நினைவில் கொள்ள வேண்டும்.” – என்றார்.

# உத்தராகண்ட் சுரங்கப் பாதையில் சிக்கிய 40 பேரை மீட்கும் பணியில் பின்னடைவு





உத்தரகாண்ட் மாநிலம் சார்தாம் நெடுஞ்சாலை திட்டத்தின் ஒரு பகுதியாக சில்க்யாரா-பர்கோட் இடையே 4.5 கிலோ மீற்றர் தொலைவுக்கு சுரங்கப் பாதை அமைக்கப்பட்டு வருகிறது.

கடந்த 12 ஆம் திகதி இந்த சுரங்கப்பாதையில் மண் சரிந்தது. அதனால் சுரங்கப் பாதைக்குள் 40 தொழிலாளர்கள் சிக்கி உள்ளனர். அவர்களை மீட்கும் பணி மும்முரமாக நடைபெற்று வருகிறது. ஆறாவது நாளான நேற்று இந்தப் பணியில் லேசான பின்னடைவு ஏற்பட்டுள்ளது.

அமெரிக்க தயாரிப்பு துளையிடும் இயந்திரம் மூலம் பக்கவாட்டில் துளையிட்டு இரும்பு குழாய்களை சொருக முயற்சி மேற்கொள்ளப்பட்டது. இந்தப் பணியின்போது ஒரு குறிப்பிட்ட அளவுக்கு மேல் பணியை தொடர முடியவில்லை எனத் தெரிகிறது. தொடர்ந்தும் முயற்சிகளை மேற்கொள்ள முடியாத காரணத்தால் மீட்புப் பணியில் லேசான பின்னடைவு ஏற்பட்டுள்ளது. இந்த இயந்திரத்தின் இயக்கம் நிறுத்தப்பட்டுள்ளது.

இந்த இயந்திரத்தின் மூலம் 6 மீட்டர் அளவுள்ள நான்கு குழாய்கள் இதுவரை பொருத்தப்பட்டுள்ளன. இப்படியாக சுமார் 50 மீட்டருக்கு குழாய் களை பொருத்தி, அதன் வழியாக தொழிலாளர்களை வெளியில் கொண்டு வருவதுதான் திட்டம். ஐந்தாவது குழாயை பொருத்த முயற்சித்தபோது பணி நிறுத்தப்பட்டுள்ளது.

துளையிடும் இயந்திரம் தரையில் இருந்து விலகியது இதற்கு காரணம் என தெரிகிறது. மீட்பு பணி மேற்கொண்டு வரும் நபர்கள் இந்த இயந்திரத்தை தரையில் இருந்து நகராமல் இருப்பதற்கான முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றனர்.

ஏற்கெனவே, இயந்திரங்கள் மூலம் சரிந்த மண்ணை அகற்றும் பணி மேற்கொள்ளப்பட்டது. ஆனால், மண் சரிவு ஏற்பட்ட காரணத்தால் அது கைவிடப்பட்டது.

சுரங்கப் பாதையில் சிக்கியிருக்கும் தொழிலாளர்கள் சுவாசிப்பதற்காக குழாய் வழியாக தொடர்ந்து ஒக்சிஜன் செலுத்தப்படுகிறது.

மற்றொரு குழாய் வழியாக உணவு பொருட்கள், குடிநீர் விநியோகிக்கப்பட்டு வருவது குறிப்பிடத்தக்கது.

# தேர்தலின்போது 'காங்கிரஸ் புயல்' வீசுவதை தெலுங்கானா பார்க்கும் என்கிறார் ராகுல் காந்தி

சட்டப்பேரவைத் தேர்தலில் காங்கிரஸ் கட்சிக்கு ஆதரவான புயல் வீசுவதை தெலுங்கானா பார்க்கப் போகிறது எனவும் ஆளும் பி.ஆர்.எஸ். மோசமாக தோல்வியடையப் போகிறது என்றும் காங்கிரஸ் முக்கியத் தலைவர் ராகுல் காந்தி தெரிவித்துள்ளார்.

கம்மம் மாவட்டம் பினபாக்காவில் நடைபெற்ற காங்கிரஸ் பொதுக்கூட்டத்தில் உரையாற்றிய அவர்,

"தெலுங்கானாவில் காங்கிரஸ் கட்சிக்கு ஆதரவான புயல் வரப் போகிறது. கே.சந்திரசேகரராவும், அவரது கட்சியும் இதுவரை பார்க்காத புயலாக அது இருக்கும். இதனை கே.சி.ஆர் உணர்ந்துள்ளார். காங்கிரஸ் கட்சி என்ன செய்தது என்று கே.சி.ஆர் கேட்கிறார். அவருக்கு நான் சொல்லிக் கொள்ள விரும்புவது என்னவென்றால், நீங்கள் படித்த பள்ளி மற்றும் கல்லூரியை உருவாக்கியதே காங்கிரஸ்தான். நீங்கள் பயணித்த சாலைகளை உருவாக்கியதும் காங்கிரஸ்தான்.



தெலுங்கானா இளைஞர்களின் ஆதரவை காங்கிரஸ் பெற்றுள்ளது. தெலுங்கானாவை தனி மாநிலமாக மாற்றுவதற்கான வாக்குறுதியை நிறைவேற்றி, ஹைதராபாத்தை உலகின் தகவல் தொழில்நுட்பத் தலைநகராக மாற்றியது காங்கிரஸ்தான்.

தெலுங்கானாவின் முக்கிய பிரச்சினையே, நிலச்சுவான்தாரர்களுக்கும், மக்களுக்கும் இடையே இருக்கும் சண்டைதான். மதுபானம், மணல் உட்பட பணம் கொழிக்கும் அனைத்து துறைகளும் 'முதல் குடும்பத்தின்' கைகளில் உள்ளன.

தனி மாநிலம் வேண்டும் என்ற போது, அந்த தெலுங்கானா மக்களுக்கானதாக இருக்கும் என மக்கள் கனவு கண்டனர். ஆனால் ஒரே ஒரு குடும்பத்தின் கனவை மட்டும் கே.சி. ஆர். நிறைவேற்றி வருகிறார்.

அவரது ஊழலின் சின்னங்கள் தெலுங்கானாவின் ஒவ்வொரு மூலையிலும் காணப்படுகின்றன. காலேஸ்வரம் தடுப்பணை திட்டம் என்ற பெயரில் மக்களிடமிருந்து ஒரு லட்சம் கோடி ரூபா கொள்ளையடிக்கப்பட்டுள்ளது.

தெலுங்கானா மக்களுக்கு காங்கிரஸ் தேர்தல் அறிக்கையில் வழங்கப்பட்டுள்ள முக்கிய 6 வாக்குறுதிகள், நிச்சயமாக நிறைவேற்றப்படும். அவை நரேந்திர மோடியின் வெற்று வார்த்தைகள் அல்ல. தெலுங்கானாவில் மக்கள் ஆட்சி அமைப்பதே எங்களின் முதல் நோக்கம். அதன் பிறகு மத்தியில் உள்ள நரேந்திர மோடி அரசை அகற்றுவோம்" என்று தெரிவித்துள்ளார்.

# சீன ஜனாதிபதி சர்வாதிகாரி: மீண்டும் விமர்சித்தார் பைடன்



சீன ஜனாதிபதி ஜி ஜின்பிங் கம்யூனிச நாட்டை வழிநடத்தும் ஒரு சர்வாதிகாரி எனவும் சீன அரசாங்கம் பிற நாடுகளுடன் ஒப்பிடும்போது முற்றிலும் மாறுபட்டது என்றும் அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் தெரிவித்துள்ளார்.

ஆபெல் உச்சி மாநாட்டின் பின் செய்தியாளர்கள் கேட்ட கேள்விற்கு பதிலளிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

அமெரிக்காவில் நடந்த ஆபெல் உச்சி மாநாட்டில் கலந்து கொள்வதற்காக சீன ஜனாதிபதி ஜி ஜின்பிங் சான்பிரான்சிஸ்கோ நகருக்குச் சென்று அதன்பின் கலிபோர்னியா சென்ற ஜனாதிபதி ஜின்பிங்கை அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் ஆகியோரும் தனியாகச் சந்தித்து பேச்சு நடத்தியுள்ளனர். அவர்கள் இரு நாட்டு இராணுவ உறவு, ரஷியா-உக்ரைன் போர், தைவான் விவகாரம் உள்ளிட்டவை குறித்து முக்கிய பேச்சு நடத்தியுள்ளனர் என தெரிவிக்கப்படுகிறது.

இந்த நிலையில், வர்த்தக போக்குவரத்து, பொருளாதார தடை, அமெரிக்க வான்வெளி பகுதியில் சீன உளவு பலூன் பறந்த விவகாரம் தொடர்பாக நீண்ட காலமாக பல்வேறு பிரச்சினைகள் இருந்து வரும் சூழ்நிலையில் இரு நாட்டு தலைவர்கள் சந்தித்துப் பேச்சு நடத்தியமை முக்கியத்துவம் வாய்ந்ததாகக் கருதப்படுகிறது.

# சுவிட்சர்லாந்தில் பலத்த காற்று காரணமாக அவசரமாக தரையிறக்கப்பட்ட விமானம்





சுவிட்சர்லாந்தில் ஏற்பட்ட பலத்த காற்று காரணமாக இரண்டு விமான நிலையங்களில் தரையிறக்க முடியாமல் போன விமானம் ஒன்றை அவசரமாக தரையிறக்கும் நிலை உருவானது.

பிரான்ஸ் நாட்டின் நைஸ் நகரிலிருந்து ஜெனீவாவுக்குச் சென்ற விமானமொன்றை ஜெனீவாவில் தரையிறக்க முயன்றபோது, பலத்த காற்று வீசியமையினால் தரையிறக்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

உடனடியாக அந்த விமானம் திரும்பி பேசல் விமான நிலையத்துக்குச் சென்ற போது அங்கும் பலத்த காற்று வீசியதால் விமானத்தால் தரையிறங்க முடியமால் போயுள்ளது.

இந்த நிலையில் 18 நிமிடங்கள் மட்டுமே பயணிக்க விமானத்தில் எரிபொருள் உள்ளது என்னும் சிக்கலான சூழல் உருவானமையினால் வேறு வழியில்லாமல் அவசரமாக அந்த விமானம் சூரிச் விமான நிலையத்தில் தரையிறக்கப்பட்டது.

# பிலிப்பைன்ஸில் சக்திவாய்ந்த நிலநடுக்கம்!



தெற்கு பிலிப்பைன்ஸில் நேற்று 6.7 ரிக்டர் அளவிலான சக்திவாய்ந்த நிலநடுக்கம் ஏற்பட்டதாக அமெரிக்க புவியியல் ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

இந்த நிலநடுக்கத்தினால் சேதம் ஏற்படக்கூடும் என்று உள்ளூர் அதிகாரிகள் எச்சரித்துள்ளனர் என குறிப்பிடப்பட்டுள்ளது.

78 கிலோ மீற்றர் ஆழத்தில் நிலநடுக்கம் ஏற்பட்டதைத் தொடர்ந்து சுனாமி அச்சுறுத்தல் எதுவும் வெளியிடப்படவில்லை என அமெரிக்கப் புவியியல் ஆய்வு மையம் தனது அறிக்கையில் தெரிவித்துள்ளது.

நிலநடுக்கத்தினால் ஏற்பட்ட சேதங்கள் குறித்து உடனடி தகவல் எதுவும் வெளியாகவில்லை எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. ஆனால் மலைப்பாங்கான தீவின் பரந்த பகுதியில் நிலநடுக்கம் உணரப்பட்ட தாக தெரிவிக்கப்படுகின்றது.




# புதுக்குடியிருப்பில் வெள்ள அனர்த்தம்

**(சண்முகம் தவசீலன்)**

முல்லைத்தீவு புதுக்குடியிருப்புப் பகுதியில் தொடர்ச்சியாகப் பெய்த கன மழையால் பாடசாலை மாணவர்கள், வர்த்தகர்கள், பொதுமக்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

தற்பொழுது நிலவும் சீரற்ற கால நிலையால் தொடர்ச்சியாக மழை பெய்து வருகின்றது. இதனால் புதுக்குடியிருப்பு நகரில் பெரும் அளவில் நீர் தேங்கிப் பாரிய அழிவுகளை அப்பகுதிசார் வர்த்தகர்களிற்கு, பாடசாலைகளிற்கு, மக்களிற்கு ஏற்படுத்தியுள்ளது. இதனால் பாடசாலை மாணவர்களின் கற்றல் செயற்பாடுகள் ஸ்தம்பித்துள்ளன. வர்த்தகர்களும், அப்பகுதி மக்களும் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

நேற்று அதிகாலை பெய்த கன மழையால் பல வர்த்தக நிலையங்களிற்குள் நீர் புகுந்துள்ளது. அத்தோடு புதுக்குடியிருப்பு ஸ்ரீசுப்பிரமணிய வித்தியாசாலை, புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரிக்கு செல்லும் வீதி, மற்றும் நகர்ப்பகுதியில் உள்ள பல வீடுகளிற்குள்ளும் வெள்ளநீர் புகுந்ததனால் மக்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

புதுக்குடியிருப்பு பிரதேச மக்கள் கடந்த சில வருடங்களாக மழைநீர் வெள்ளத்தினால் அவ்வப்போது பாதிக்கப்பட்டு வருகின்றனர். சிறந்த நீர் வடிகாலமைப்பு பொறிமுறை ஒன்று புதுக்குடியிருப்பு பிரதேசத்திற்கு இல்லாமையும், அரச திணைக்களங்களின் அசண்டையீனமுமே இதற்குக் காரணம் எனவும் மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.











# மானிப்பாயில் நினைவேந்தலுக்குத் தடை கோரும் வழக்கின் கட்டளை திங்களன்று மல்லாகம் மன்றில்



மாவீரர் வார நினைவேந்தலை மானிப்பாய் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதிகளில் தடை செய்யக்கோரி மானிப்பாய் பொலிஸாரால் தாக்கல் செய்யப்பட்ட வழக்கு தொடர்பான கட்டளை நவம்பர் 20 ஆம் திகதி திங்கட்கிழமை வழங்கப்படவுள்ளது.

நாட்டில் பயங்கரவாத அமைப்பாகத் தடை செய்யப்பட்ட தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பில் உயிரிழந்தவர்களை நினைவுகூரும் மாவீரர் நாள் நினைவேந்தல் எதிர்வரும் நவம்பர் 27ஆம் திகதி மானிப்பாய் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதிகளில் வலி தென்மேற்கு பிரதேச சபை முன்னாள் தவிசாளர் மற்றும் வலி தென்மேற்கு பிரதேச சபை உறுப்பினர்களால் நடத்தப்படுவதற்குத் தடைவிதிக்கக் கோரியே மல்லாகம் நீதிமன்றில் மானிப்பாய் பொலிஸார் மனுத் தாக்கல் செய்தனர்.

இது தொடர்பிலான விசாரணைகள் இன்றையதினம் தினம் மல்லாகம் நீதிவான் காயத்திரி சைலவன் முன்னிலையில் நடைபெற்றது.

பொலிஸாரின் விண்ணப்பத்தை நிராகரிக்கக் கோரிய எதிர்மனுதாரர்களின் சட்டத்தரணிகள், இறந்த உறவினர்களை நினைவு கூர்வது எவ்விதத்திலும் பயங்கரவாதச் செயலாகாது, பொலிஸாரின் செயற்பாடு கார்த்திகை விளக்கீட்டையும் பயங்கரவாதமாக சித்திரிக்கும், பொலிஸாரின் கோரிக்கை ஏற்கப்பட்டு கட்டளை வழங்கப்பட்டால் நவம்பர் 26 ஆம் திகதி கார்த்திகை விளக்கீட்டை அனுஷ்டிப்பதில் பல்வேறு பிரச்சினைகள் ஏற்படும், கடந்த காலங்களில் இறந்தவர்களின் நினைவேந்தலை அரசாங்கங்கள் அனுமதித்திருந்தன, மேலும் கடந்த காலங்களில் வடக்கு கிழக்கு நீதிமன்றங்களில் இவ்வாறு தாக்கல் செய்யப்பட்ட மனுக்கள் நிராகரிக்கப்பட்டன எனச் சுட்டிக்காட்டினர்.

மானிப்பாய் பொலிஸாரின் தடைக் கோரிக்கையை நிராகரிக்குமாறு அவர்கள் கோரினர்.

விசாரணைகளை அடுத்து விண்ணப்பம் தொடர்பான கட்டளைக்காக எதிர்வரும் நவம்பர் 20 ஆம் திகதி திங்கட்கிழமைக்கு வழக்கு ஒத்திவைக்கப்பட்டது.

எதிர்மனுதாரர்கள் சார்பில் சட்டத்தரணி வி.மணிவண்ணன் உள்ளிட்ட பல சட்டத்தரணிகள் ஆஜராகினர்.



# சிறுவருக்கு மிட்டாய் காட்டுவது போல தமிழருக்கு பல்கலை அமைப்பது எனக் கதை விடுகிறார் ரணில்

## ரெலோப் பிரமுகர் சபா குகதாஸ் காட்டம்

சிறுவர்களுக்கு பஞ்சு மிட்டாய் காட்டுவது போல தமிழர்களுக்கு அதிகாரம் இல்லாத பல்கலைக்கழகம் காட்டுகிறார் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க என வடக்கு மாகாணசபை முன்னாள் உறுப்பினரும் ரெலோப் பிரமுகருமான சபா குகதாஸ் குற்றஞ்சாட்டியுள்ளார்.

இது தொடர்பில் அவர் தெரிவித்துள்ளவை வருமாறு:-

இந்த வரவு - செலவுத் திட்டத்தில் வடக்கு , கிழக்கு மாகாணசபைகளுக்கு மாகாணசபை அதிகாரங்களுடன் பல்கலைக்கழகங்கள் அமைப்பதற்கான முன் மொழிவு ஒன்றை கொண்டு வந்துள்ளார் கானாதிபதி ரணில் விக்கிரமசிங்க. வேடிக்கை என்னவென்றால் மாகாணசபைகளுக்கான அதிகாரங்களைப் பகிர்வதற்கான கோரிக்கைகளை பல தடவை தமிழர் தரப்பு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிடம் முன்வைத்தும், அவற்றத் தராமல் ஏமாற்றி வரும் அதேநேரம் குழந்தைகளுக்கு மிட்டாய் காட்டுவது போல தமிழர்களுக்கு அதிகாரம் இல்லாத மாகாணசபைக்குள் பல்கலைக்கழகம் கொண்டுவருவதாக மிட்டாய் காட்டுகிறார். இதற்கு இனவாதி சரத் வீரசேகர கொம்புக்கு மண் எடுப்பது போல இனவாதத்தை தூண்டி தன்னுடைய அரசியலை நடத்துகின்றார்.

கடந்த கால வரவு செலவுத் திட்டங்களில் தமிழர்கள் சார்ந்து கொண்டு-வரப்பட்ட பல முன்மொழிவுகள் கடதாசிகளில் மட்டுமே இருந்தன. நடைமுறைப் படுத்தப்படவில்லை. அதே போன்று இம்முறையும் பல முன்மொழிவுகள் உள்ளடக்கப்பட்டுள்ளன.

வலிந்து காணாமல் ஆக்கப்டோரின் உறவினர்களுக்கு இழப்பீடு வழங்குவதற்காக நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இச் செயற்பாடு பாதிக்கப்பட்ட மக்களுக்கான நீதியை வழங்குவதற்குப் பதிலாக குற்றவாளிகளைக் காப்பாற்றும் செயற்பாடாகும். உண்மையாக முதலாவது, பொறுப்புக் கூறலின் ஊடாக பக்கசார்பற்ற சுயாதீன விசாரணை. அதன் பின்னர்தான் பரிகார நீதி. இவ்வாறான ஒழுங்கு முறை மூலமே வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் பிரச்சினைக்கு தீர்வு காண முடியும். இதுவே பாதிக்கப்பட்ட தரப்பின் கோரிக்கையும் ஆகும்.

கடற்றொழில் அபிவிருத்திக்கு நிதி ஒதுக்கீடு என்பது மிகப் பெரும் ஏமாற்று. காரணம் வடக்கு கடற்தொழிலாளர்கள் தொடர்ந்து எதிர் நோக்கும் சட்டவிரோத மீன்பிடி மற்றும் கடல் அட்டைப் பண்ணை விவகாரம் போன்ற பிரச்சினைகளுக்கு ஜனாதிபதி இதுவரை அவர்களைச் சந்தித்து ஆக்கபூர்வமான முடிவை எடுக்காமல் பிரச்சினைகளை கண்டும் காணாதவர் போல இருந்து கொண்டு, கடல்வள அபிவிருத்திக்கு நிதி ஒதுக்கீடு செய்வது வேடிக்கையாக உள்ளது.

# 13 ஆயிரம் உள்ளூராட்சி ஊழியர்களுக்கு நிரந்தர நியமனம் வழங்குவதற்கு முடிவு!

## நாடாளுமன்றத்தில் பிரதமர் தெரிவிப்பு



உள்ளூராட்சி சபை நிறுவனங்களில் பணிபுரியும் நிரந்தரமற்ற சிற்றூழியர்களுக்கு நிரந்தர நியமனம் வழங்குவது தொடர்பில் கொள்கை ரீதியான தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள் மற்றும் உள்ளூராட்சி சபை அமைச்சர் பிரதமர் தினேஷ் குணவர்தன தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று முன்தினம் வியாழக்கிழமை வாய்மூல விடைக்கான கேள்வி நேரத்தின் போது தயாசிறி ஜயசேகர எம்.பி. எழுப்பிய கேள்வி ஒன்றுக்குப் பதிலளிக்கும் போதே பிரதமர் இவ்வாறு தெரிவித்தார்.

தயாசிறி ஜயசேகர எம்.பி. தமது கேள்வியின் போது, கடந்த எட்டு வருடங்களாக மேற்படி சிற்றூழியர்கள் 13,000 பேர் கடமை புரிந்து வருகின்றனர் எனவும், உள்ளூராட்சி சபைகள் மூலம் அவர்களுக்கு சம்பளம் வழங்கப்பட்டாலும் அவர்களுக்கான நிரந்தர நியமனம் இதுவரை வழங்கப்படவில்லை, அவர்களுக்கான நிரந்தர நியமனத்தை பெற்றுக் கொடுக்க எடுத்திருக்கும் நடவடிக்கை என்ன என்று கேட்டார்.

அதற்கு பதிலளித்த பிரதமர் –

இதற்கு முன்னரும் அது தொடர்பில் கேள்வி எழுப்பப்பட்டு பதில் வழங்கப்பட்டுள்ளது. அவர்களை நிரந்தரமாக்குவதற்கு திறைசேரியுடன் பேச்சு நடத்தப்பட்டு உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

அவர்களுக்கான கொடுப்பனவை வழங்கக்கூடிய சில உள்ளூராட்சி சபைகள் இருந்த போதும் அத்தகைய சுமையை சுமக்க முடியாத சில உள்ளூராட்சி சபைகளும் காணப்படுகின்றன.

அந்த வகையில் அது தொடர்பில் கவனம் செலுத்தப்பட்டு அவர்கள் அனைவருக்கும் நிரந்தர நியமனம் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

அது தொடர்பில் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக திறைசேரியுடன் பேச்சு நடத்தப்பட்டுள்ளது. அதற்கிணங்க உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும். – என்றார்.



# நல்லூரில் ஓட்டோ பற்றரியை ஆட்டையைப் போட்டவர் கைது

நல்லூர் ஆலய வளாகத்தில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த ஓட்டோவில் இருந்த பற்றரியைத் திருடியவர் யாழ் மாவட்ட பொலிஸ் புலனாய்வு பிரிவினரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

கந்தசஷ்டி விரத தினத்தை முன்னிட்டு நல்லூர் கந்தசாமி ஆலயத்தில் விசேட பூஜை வழிபாடுகள் இடம்பெறும் நிலையில் நல்லூர் ஆலயத்திற்கு பெருமளவில் பக்தர்கள் வருகின்றனர்.

நல்லூர் ஆலய வளாகத்தில் நல்லூர் ஆலயத்திற்கு வருகை தந்த பக்தர் ஒருவரின் ஓட்டோவில் இருந்து பற்றரியைத் திருடியவர் யாழ் மாவட்ட பொலிஸ் புலனாய்வு பிரிவினரால் கைது செய்யப்பட்டுள்ளமையோடு திருடிய பற்றரியும் மீட்கப்பட்டுள்ளது.

கைது செய்யப்பட்டவர் காரைநகர் பகுதி சேர்ந்தவர் எனவும், நீண்ட காலமாக யாழ்ப்பாண மாவட்டத்தில் பல்வேறு நூதனமான திருட்டுகளில் ஈடுபட்டு வருபவர் எனவும், யாழ் மாவட்ட பொலிஸ் புலனாய்வு பிரிவினர் தெரிவித்தனர். கைது செய்யப்பட்டவர் விசாரணைகளின் பின் நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தப்படவுள்ளார்.

# புலம்பெயர் தமிழர்களின் முதலீடுகள் வர வேண்டுமானால் மாகாணசபைகள் முழு அதிகாரத்துடன் இயங்க வேண்டும்

## இடித்துரைக்கின்றார் சுரேஷ் பிரேமச்சந்திரன்



புலம்பெயர் தமிழர்களின் முதலீடுகளைக் கோரிநிற்கும் ஜனாதிபதி மாகாண சபைகளுக்கான அதிகாரங்களை முழுமையாக வழங்குவதற்கு முன்வரவேண்டும். மாகாணசபைகள் தீர்மானம் இயற்றும் நிறுவனங்களாக இல்லாமல் சட்டமியற்றும் நிறுவனங்களாக மாற வேண்டும். அப்பொழுது தான் புலம்பெயர் தமிழர்கள் அச்சமின்றி இலங்கையில் தமது முதலீடுகளை மேற்கொள்ள முன்வருவார்கள். நாட்டின் பொருளாதாரம் வளர்ச்சியடைவதற்கு அவர்களின் முதலீடுகள் தேவை என்பதை உண்மையிலேயே ஜனாதிபதி விரும்பினால் அவர்களின் முதலீடுகள் பாதுகாப்பாக இருக்கும் என்ற உத்தரவாதத்தை ஜனாதிபதி வழங்க வேண்டும். அதற்கு மாகாணசபைகள் முழுமையான அதிகாரம் பெற்றிருப்பது அவசியம் என்று ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் தலைவரும் ஜனநாயக தமிழ் தேசிய கூட்டணியின் பேச்சாளருமான சுரேஷ் க.பிரேமச்சந்திரன் தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் விடுத்துள்ள ஊடக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

தமிழ் மக்களின் தேசிய இனப்பிரச்சினையைத் தீர்ப்பது என்ற போர்வையிலேயே மாகாணசபைகள் சட்டமூலம் நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டது. அத்துடன் அரசியல் சாசனத்திற்கான பதின்மூன்றாவது திருத்தச் சட்டமும் நிறைவேற்றப்பட்டது. மஹிந்த ராஜபக்ஷவிலிருந்து ரணில் விக்கிரமசிங்க வரை பதின்மூன்றாவது திருத்தத்திற்கு மேலதிகமாகச் சென்று அதிகாரங்களை வழங்குவோம் என்றும், மாகாணசபைகளைச் சரியான முறைகளில் நடைமுறைப்படுத்துவோம் என்றும் ஐ.நா. செயலாளருக்கும், ஐ.நா. மனித உரிமைகள் பேரவைக்கும், இந்தியத் தலைவர்களுக்கும் பல்வேறுபட்ட உறுதிமொழிகளைக் கொடுத்த பொழுதிலும் கூட கடந்த ஐந்து வருடங்களாக மாகாண சபைகளுக்கான தேர்தல்கள் ஒத்திவைக்கப்பட்டுள்ளமையுடன் எதிர்காலத்தில் கூட மாகாணசபைகள் இயங்குமா என்ற கேள்வியும் எழக்கூடிய சூழ்நிலை இன்று தோன்றியிருக்கின்றது.

ஜனாதிபதியும் ஆளும் கட்சியினரும் அடுத்த வருடத்தைத் தேர்தல் ஆண்டாகச் சுட்டி, குறிப்பாக நாடாளுமன்ற, ஜனாதிபதித் தேர்தல்கள் நடைபெறுமென்று கூறிவருகின்றனர். ஆனால் கடந்த ஐந்து வருடங்களாக நடைபெறாத மாகாணசபைகளுக்கான தேர்தல்கள் எப்பொழுது நடைபெறும் என்பது குறித்து எவ்வித அறிவித்தல்களும் இல்லை. இது உலக நாடுகளையும் தமிழ் மக்களையும் ஏமாற்றும் ஒரு செயற்பாடாகும்.

இப்பொழுது புதிய வரவு-செலவுத் திட்டத்திற்கான பிரேரணைகளை முன்மொழிந்த ஜனாதிபதி, நாட்டில் புதிய பல்கலைக்கழகங்களை ஆரம்பிக்க புலம்பெயர் தமிழர்கள் முன்வர வேண்டும் என்று அழைப்பு விடுத்துள்ளமையுடன் தனியார் மற்றும் தனி நிறுவனங்களும் மாகாணசபைகளும் புதிய பல்கலைக்கழகங்களை உருவாக்க முடியுமென்றும் கூறியுள்ளார்.

இன்றைய சூழலில் பதினைந்து இலட்சத்திற்கும் மேற்பட்ட புலம்பெயர் தமிழ் மக்கள் ஐரோப்பிய, அமெரிக்க, ஆஸ்திரேலிய நாடுகளில் வாழ்கின்றனர் என்பதும் பொருளாதாரத்தில் கனிசமான முன்னேற்றத்தைக் கொண்டவர்களாக அவர்கள் இருக்கின்றார்கள் என்பதும் வெளிப்படையான விடயமாகும்.

தாம் பிறந்து வளர்ந்த வடக்கு-கிழக்குப் பிரதேசங்களை அபிவிருத்தி செய்ய அவர்கள் ஆர்வமாக இருப்பார்கள் என்பதில் மாற்றுக்கருத்து இல்லை. அவ்வாறு தாம் விரும்பிய வடக்கு-கிழக்கு மாகாணங்களுக்கு முதலீடுகளைக் கொண்டுவருதவற்கு மாகாணசபைகளுக்கு எந்தவிதமான அதிகாரங்களும் இதுவரை கிடையாது. ஆகவேதான் இலங்கை திவாலான நாடாக அறிவிக்கப்பட்ட காலத்திலும்கூட, இலங்கையைப் பொருளாதார ரீதியாக மீட்சியடைய வைக்க வேண்டுமாக இருந்தால், சர்வதேச முதலீடுகளை இலங்கை உள்வாங்க தேவை இருப்பதாகவும் அதில் புலம்பெயர் மக்களின் கணிசமாக இருக்க முடியுமென்றும் ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி தொடர்ச்சியாகக் குறிப்பிட்டு வந்துள்ளது.

அவ்வாறு புலம்பெயர் தமிழ் மக்களின் முதலீடுகளை உள்வாங்குவதாக இருந்தால், சர்வதேச முதலீடுகளைப் பெற்றுக்கொள்வதற்கான அதிகாரங்களை மாகாண அரசுகளுக்கு வழங்க வேண்டுமென்பது முதன்மையானது.

அதுமாத்திரமல்லாமல், ஜனாதிபதி கூறுவது போன்று, பல்கலைக்கழகங்களை உருவாக்குவதற்கான நிலங்களைப் பகிர்ந்தளிப்பது தொடக்கம், முதலீடு செய்ய முன்வருபவர்களுக்கான சகல சலுகைகளையும் வழஙகக்கூடிய அதிகாரங்களும் மாகாணசபைகளுக்கு இருந்தாக வேண்டும்.

ஜனாதிபதி தொடர்ச்சியாக புலம்பெயர் மக்களின் முதலீடுகளைக் கோரி நிற்கின்றார். ஆனால் புலம்பெயர் தமிழ் மக்கள் தமது முதலீடுகளைக் கொண்டுவருவதற்கான அதிகாரங்களை ஆக்கபூர்வமான வகையில் மாகாணங்களுக்குக் கொடுப்பதற்கான எந்தவித நடவடிக்கைகளையும் மேற்கொள்ளவில்லை.

பத்திரிகைகளுக்கு அறிக்கை விடுவது மாத்திரம் போதாது. மாறாக, பொருளாதார நலன்களை மேம்படுத்துவதற்கு சர்வதேச முதலீடுகளை உள்வாங்குவதற்கான புதிய சட்டங்கள் உருவாக்கப்படவேண்டும். குறிப்பாக மாகாணங்களுக்கு அத்தகைய அதிகாரங்கள் வழங்கப்படவேண்டும்.

வெளிநாட்டு முதலீடுகள் என்று சொல்கின்றபொழுது வெறுமனே பல்கலைக்கழகங்களில் மாத்திரமல்லாமல், சர்வதேச தரம் வாய்ந்த வைத்தியசாலைகள், விவசாயம் மற்றும் கடல் வளங்களை உள்ளடக்கிய அபிவிருத்தி செயற்பாடுகளுக்கான வலுவான திட்டங்கள் உற்பத்திசார் தொழிற்சாலைகள் போன்றவற்றைச் செயற்படுத்துவதற்கும் மாகாணங்களுக்கு அதிகாரங்கள் வேண்டும்.

இவை நடைபெற வேண்டுமாயின் உடனடியாக மாகாணசபைகளுக்கான தேர்தல்கள் நடைபெற வேண்டும்.

எல்லா மாகாணசபைத் தேர்தல்களையும் நடாத்துவதில் நெருக்கடிகள் காணப்படுமாயின், குறைந்தபட்சம் வடக்கு-கிழக்கு மாகாணங்களுக்கான தேர்தல்களாவது நடாத்தப்படவேண்டும்.

பொருளாதாரத்தை வளப்படுத்த, சட்டம் ஒழுங்கை நிலைநாட்ட ஒரு தார்மீக சமுதாயம் ஒன்றை உருவாக்கக்கூடிய வகையில் முடிவெடுத்து செயற்படக்கூடிய அதிகாரங்கள் மாகாண சபைகளுக்கு வழங்கப்படவேண்டும்.

இவற்றை விடுத்து வெற்று வார்த்தைகளும் சிங்கள பௌத்த பேரினவாதிகளின் முடிவுகளுக்கு அடங்கிப் போவதுமாக இருந்தால் இந்த நாட்டில் எதனையும் சாதிக்க முடியாது. - என்றுஉள்ளது.

# உகந்தையில் களைகட்டும் கந்தசஷ்டி விரதம்



வரலாற்று பிரசித்தி பெற்ற உகந்த மலை முருகன் ஆலயத்தில் வருடாந்த கந்த சஷ்டி விரதம் நூற்றுக் கணக்கான பக்தர்களுடன் ஆலய பிரதமகுரு சீதாராம் குருக்கள் தலைமையில் மிகவும் சிறப்பாக நடைபெற்று வருகிறது.

இன்று சனிக்கிழமை சூரசம்ஹாரம் நடைபெறும்.

ஆலயத்தில் கந்தசஷ்டி மற்றும் கந்தபுராணம் பாடுவதையும் பூஜைகள் இடம்பெறுவதையும் காணலாம்.

**(படங்கள் .வி.ரி.சகாதேவராஜா)**















# இன்றைய ராசி பலன்கள் - 18.11.2023

## மேஷம்



இன்று உங்களுக்கு சாதகமான நாள். நீங்கள் நம்பிக்கை உணர்வுடன் வெற்றியைக் கொண்டாடி மகிழ்வீர்கள். உங்கள் இனிமையான வார்த்தைகள் மூலம் பிறரை வெல்வீர்கள். இன்று முக்கிய முடிவுகள் எடுக்க உகந்த நாள்.

கடினமான பணிகளையும் எளிதில் முடிப்பீர்கள். பணியில் உங்கள் செயல்திறனுக்கு அங்கீகாரமும் பாராட்டும் பெறுவீர்கள்.

உங்கள் துணையுடன் இனிமையான தருணங்களை பகிர்ந்து மகிழ்வீர்கள். உங்கள் இனிமையான வார்த்தைகள் உங்கள் துணையை மகிழ்விக்கும். இதனால் இருவருக்கிடையிலான உறவில் நல்ல பிணைப்பு ஏற்படும்.

பணப்புழக்கம் தாராளமாக காணப்படும். உங்கள் வங்கியிருப்பு உயரக் காண்பீர்கள்.

இன்று சிறந்த ஆற்றலுடன் காணபடுவீர்கள்.

## ரிஷபம்



இன்று நீங்கள் நம்பிக்கையான மன நிலை கொண்டிருப்பீர்கள். நீங்கள் உறுதியுடன் இருப்பதன் மூலம் இன்றைய நாளின் சவால்களை வெற்றி கொள்ள முடியும்.

இன்று இறுக்கமான பணிகளில் மும்மரமாக இருப்பீர்கள். பணியின் போது தவறுகள் ஏற்பட வாய்ப்புள்ளது, இது உங்களுக்கு கவலையை அளிக்கும்.

உறவில் நல்லிணக்கம் பராமரிக்க வாக்கு வாதங்களை தவிர்க்கவும்.அமைதியான சகஜமான அணுகுமுறை மூலம் இனிமையற்ற தருணங்களை தவிர்க்கலாம்.

சிறிது பண இழப்பு காணப்படுகின்றது. தேவையற்ற செலவுகளை தவிர்க்க கட்டுப்பாடுடன் செலவு செய்ய வேண்டும்.

வெந்நீர் குடிப்பதன் மூலம் சளியை தவிர்க்க இயலும். குளிர்ச்சியான உணவுகளை தவிர்க்க முயலுங்கள்.

## மிதுனம்



இன்று உங்களின் பொறுமை சோதனைக்குள்ளாகும் சூழ்நிலை ஏற்படும். நீங்கள் எளிதில் உணர்ச்சி வசப்படுவீர்கள். நீங்கள் அமைதியான அணுகுமுறை மேற்கொள்ள வேண்டும். உங்கள் இலக்குகளை அடைய கடினமாக போராட வேண்டும்.

பணியிடத்தில் பதட்டமான சூழ்நிலை காணப்படும். பணியிடச் சூழலில் காணப்படும் பதட்டமான் நிலைமை உங்களுக்கு கவலையை ஏற்படுத்தும்.

உங்கள் துணையிடம் உணரச்சிவசப்படுவீர்கள். இதனால் இருவருக்கிடையேயான உறவு பாதிக்கும். நல்ல புரிந்துணர்விற்கு சகஜமான அணுகுமுறை மேற்கொள்வது நல்லது.

பயணத்தின் போது பண இழப்பு காணப்படுகின்றது. பணத்தை கையாளும்போது கவனம் தேவை.

## கடகம்



இது உங்களுக்கு சாதகமான நாள். நற்பலன்கள் கிடைக்கும் நாள். உங்கள் தொடர் முயற்சியால் இது சாத்தியம்.

வேலை தொடர்பான பயணம் காணப்படுகின்றது. இது உங்களுக்கு நன்மை பெற்றுத் தரும். வெற்றி கிடைக்கும்.

உங்கள் துணையுடன் சிறந்த உணர்வுகளை பகிர்ந்து கொள்வீர்கள். இன்றைய நாளை உங்கள் துணையுடன் நெருங்கிப் பழகி கழிப்பீர்கள்.

இன்று அதிர்ஷ்டகரமான நாள். இன்று அதிக பண வரவு காணலாம். அந்தப் பணத்தை நீங்கள் ஆன்மீக நோக்கத்திற்கு பயன்படுத்தலாம்.

இன்று உங்கள் மன உறுதி காரணமாக ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும்.

## சிம்மம்



இன்று பரிசோதனைகுள்ளாகும் நாள். ஆன்மீக ஈடுபாடு உங்களுக்கு ஆறுதலை அளிக்கும். ஆன்மீக யாத்திரை உங்களுக்கு பயனளிக்கும்.

பணியிடச் சூழலில் அசௌகரியம் காணப்படும். உங்கள் பணிகளை மேற்கொள்ளும்போது கவனமுடன் இருக்க வேண்டும்.

நீங்கள் உங்கள் துணையுடன் கடுமையாக நடந்து கொள்வீர்கள். இது உறவின் நல்லிணக்கத்தை கெடுக்கும். உறவில் மகிழ்ச்சியை தக்க வைக்க அமைதியாக நடந்து கொள்ள வேண்டும்.

நிதிநிலைமை ஏமாற்றம் அளிக்கும் வகையில் இருக்கும். குடும்பத்திற்காக தேவையற்ற விஷயங்களுக்கு செலவு செய்ய நேரலாம்.

சில அசௌகரியங்கள் காரணமாக உங்கள் ஆரோக்கியம் பாதிக்கப்படும்.

## கன்னி



இன்று வருத்தப்படும்படியான சில சூழ்நிலை காணப்படும். நீங்கள் எதிர்பார்த்த பலன்கள் கிடைக்காது. எளிய அணுகுமுறை மேற்கொள்வதன் மூலம் சாதகமான பலன்கள் கிடைக்கும்.

கூடுதல் பொறுப்புகள் காரணமாக பணிகளை குறித்தநேரத்தில் முடிப்பதை கடினமாக உணர்வீர்கள். விரும்பிய இலக்குகளை அடைவதற்கு திட்டமிட்டு பணியாற்ற வேண்டும்.

குடும்ப பிரச்சினை ஒன்றின் காரணமாக கருத்து வேறுபாடு ஏறபட்டு உங்கள் துணையுடன் சூடான விவாதத்தில் கலந்து கொள்வீர்கள்.இத்தகைய போக்கிற்கு இடம் கொடுக்காமல் இருக்க முயலுங்கள்.

உங்கள் குழந்தையின் ஆரோக்கியத்திற்காக பணம் செலவு செய்ய வேண்டிய கட்டாயம் காணப்படும். இதனால் சேமிப்பதற்கான வாய்ப்பு குறைவாக இருக்கும்.

## துலாம்



உங்கள் முயற்சியில் பொறுமையும் உறுதியும் தேவை. உங்கள் முயற்சில் வெற்றி காண உணர்ச்சி வசப்படாமல் இருக்க வேண்டும். உங்கள் பணிகளை திட்டமிட்டு நடத்த வேண்டும்.

இன்று கூடுதல் பணிகள் காணப்படும். சக ஊழியர்களின் கடுமையான நிலைப்பாட்டின் காரணமாக நீங்கள் உணர்ச்சிவசப்பட நேரலாம்.

நீங்கள் குழப்பமான உணர்வுகளை உங்கள் துணையிடம் வெளிப்படுத்துவீர்கள். நீங்கள் இதனை தவிர்த்து அமைதியுடனும் கட்டுப்பாட்டுடனும் இருக்க வேண்டும்.

பணப்புழக்கம் இன்று சுமூகமாக இருக்காது. தேவையற்ற செலவுகள் செய்வீர்கள். இது உங்களுக்கு கவலையை ஏற்படுத்தும்.

இன்று ஆற்றலும் ஆரோக்கியமும் குறைந்து காணப்படும். தொண்டை வலி ஏற்பட வாய்ப்புள்ளது.

## விருச்சிகம்



சுய வளர்ச்சிக்கான முயற்சிகளுக்கு இன்று சாதகமான நாள். உங்கள் மன உறுதி மூலம் இன்று உங்கள் விருப்பங்களை பூர்த்தி செய்து கொள்வீர்கள். நீங்கள் எடுக்கும் முயற்சிகள் நல்ல பலனளிக்கும்.

பணியில் உங்கள் செயல்திறன் உங்களுக்கு திருப்திகரமாக இருக்கலாம். குறித்தநேரத்தில் பணிகளை முடிப்பதற்கான சாத்தியம் உள்ளது.

உங்கள் துணையுடன் நல்ல புரிந்துணர்வை பராமரிப்பீர்கள். உங்கள் துணையின் விருப்பப்படி நடந்து கொள்ள நேரலாம்.

இன்று பண வரவு அதிகமாக காணப்படும். பணத்தை சிறப்பாக சேமிப்பீர்கள். இதனால் மகிழ்ச்சியாக இருப்பீர்கள்.

# இன்றைய ராசி பலன்கள் - 18.11.2023



## தனுசு

இன்றைய நிகழ்வுகளில் நீங்கள் நடைமுறை அணுகுமுறையை மேற்கொள்ள வேண்டும். உணர்ச்சி வசப்படுவதை தவிர்க்க வேண்டும். எதிர்மறை எண்ணங்கள் உங்களை பாதிக்காமல் பார்த்துக் கொள்ளுங்கள். இன்று அமைதியாக இருங்கள்.

பணியிடச் சூழல் மகிழ்சிகரமாக இருக்காது. சக பணியாளர்களுடன் மோதல் ஏற்பட வாய்ப்புள்ளதால் நீங்கள் கவனமாக இருக்க வேண்டும்.

உங்கள் துணையுடன் மனம் திறந்து பேசுங்கள். உங்கள் உணர்வுகளை ஒளிவு மறைவு இன்றி வெளிப்படுத்துவதன் மூலம் நல்லுறவு வளரும்.

இன்று கூடுதல் செலவுகள் காணப்படும். உங்கள் தேவைகளை பூர்த்தி செய்துகொள்ள நீங்கள் சிறிய அளவில் கடன் வாங்குவீர்கள்.



## கும்பம்

இன்று அர்த்தமுள்ள நாளாக இருக்காது. உங்கள் முயற்சிகள் வெற்றியை அளிக்காது. நீங்கள் அமைதியாகவும் நட்பான அணுகுமுறையுடனும் இருக்க வேண்டும். ஆன்மீக ஈடுபாடு ஆறுதலை பெற்றுத் தரும்.

பணியிடச் சூழல் சாதகமான பலன்களை அளிக்காது. பணிச்சுமை அதிகமாக காணப்படும்.

உங்களின் கடுமையான போக்கு காரணமாக உங்கள் துணையுடன் மகிழ்ச்சியை தக்க வைத்துக் கொள்வது கடினம். சகஜமான அணுகுமுறையால் நன்மை விளையும்.

இன்று நிதிநிலைமை மகிழ்ச்சிகரமாக இருக்காது. இன்று கூடுதல் செலவுகள் செய்ய நேரலாம்.

பதட்டம் காரணமாக கால் வலி மற்றும் முதுகில் விறைப்பு ஏற்பட வாய்ப்புள்ளது.



## மகரம்


இன்று சில வலுவற்ற சூழ்நிலை காணப்படும். திட்டமிட்டு முயற்சி செய்தால் நல்ல பலன் கிடைக்கும். பிரார்த்தனை மற்றும் மந்திரங்கள் மூலம் நற்பயன் பெறலாம்.

பணியிடத்தில் நற்பலன்கள் காண உங்கள் பணியில் ஒழுங்கு முறையான அணுகுமுறை வேண்டும்.

குடும்ப பிரச்சினை ஒன்றின் காரணமாக உங்கள் துணையுடன் தவறான புரிந்துணர்வு ஏற்பட வாய்ப்புள்ளது. இது உங்களுக்கு கவலையை ஏற்படுத்தும். உங்கள் துணையுடன் நட்பான அணுகுமுறை மேற்கொள்வது சிறந்தது.

இன்று தேவையற்ற செலவுகள் காணப்படும். இதனால் சிறிது வருத்தம் உங்களிடம் காணப்படும்.

இன்று பதட்டம் காரணமாக தலைவலி ஏற்பட வாய்ப்புள்ளது.



## மீனம்

உங்களை மேம்படுத்திக் கொள்ள இன்றைய நாளை நீங்கள் பயன்படுத்திக் கொள்ளலாம். உங்களின் இனிமையான தொடர்பின் மூலம் சாதகமான பலன்கள் சாத்தியம். இன்று உங்களுக்கு சிறப்பான நாள்.

பணியிடத்தில் உங்கள் செயல்திறன் சாதகமான பலன்களை அளிக்கும். பணி சம்பந்தமான பயணம் காணப்படுகின்றது.

உங்கள் துணையுடன் மகிழ்ச்சியான தருணங்களை பகிர்ந்து கொள்வீர்கள். உங்கள் இனிமையான வார்த்தைகளால் உங்கள் துணை மகிழ்ச்சியுறுவார். இதனால் இருவரிடையே நல்ல புரிந்துணர்வு ஏற்படும்.

பணப்புழக்கம் அதிக அளவில் காணப்படும். உங்கள் தேவைகள் சமாளிக்க நீங்கள் சிறிய அளவில் கடன் வாங்குவீர்கள்.







# இரண்டு பொலிஸாரைத் தாக்கிக் குத்திய ஓட்டோச் சாரதி போதை நிலையில் கைது

குளியாப்பிட்டிய கிரியுல்ல பிரதேசத்தில் போக்குவரத்துப் பிரிவில் கடமையாற்றும் இரண்டு பொலிஸ் உத்தியோகத்தர்களை தாக்கி பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவரை கூரிய ஆயுதத்தால் குத்தி காயப்படுத்திய பிரதான சந்தேக நபர் கிரியுல்ல பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

காயமடைந்த பொலிஸ் உத்தியோகத்தர்கள் இருவரும் தம்பதெனிய வைத்தியசாலையில் சிகிச்சைக்காக சேர்க்கப்பட்டுள்ளனர் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.



தாக்கப்பட்ட இரு பொலிஸ் உத்தியோகத்தர்களும் கிரியுல்ல சமன்கல பிரதேசத்தில் கடமையில் ஈடுபட்டிருந்த சமயம், சோதனை நடவடிக்கைக்காக ஒரு ஓட்டோவை நிறுத்த முற்பட்டபோது சாரதி வண்டியை நிறுத்தாமல் சென்றுள்ளார்.

இதனால் இரு பொலிஸ் உத்தியோகத்தர்களும் மோட்டார் சைக்கிளில் துரத்திச் சென்று ஓட்டோவை நிறுத்தியுள்ளனர்.

இதன்பின்னர் சோதனைகளை மேற்கொண்ட பொலிஸார், ஓட்டோவின் சாரதி மது போதையில் இருப்பதை அவதானித்து, அவரைக் கைதுசெய்ய நடவடிக்கை எடுத்துள்ளனர். இதன்போதே அந்நபர் பொலிஸார் மீது தாக்குதலை மேற்கொண்டுள்ளார்.

இந்த சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை கிரியுல்ல பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.



# இலங்கை சர்வதேச பாடசாலைகளுக்கிடையிலான கராத்தே வத்தளை லைசியம் முதலிடம்

**(இப்றாஹிம்)**

இலங்கையின் சர்வதேச பாடசாலைகளுக்கிடையிலான கராத்தே சுற்றுப் போட்டியில் வத்தளை லைசியம் சர்வதேச பாடசாலை முதலிடம் பெற்றுள்ளது.

இலங்கையிலுள்ள சர்வதேச பாடசாலைகளுக்கிடையிலான கராத்தே சுற்றுப் போட்டி கொழும்பு சுகததாச உள்ளக அரங்கில் இடம்பெற்றது.

இச் சுற்றுப் போட்டியில் வத்தளை லைசியம் சர்வதேச பாடசாலை 62 தங்கப் பதக்கங்களையும், 47 வெள்ளிப் பதக்கங்களையும், 59 வெண்கலப் பதக்கங்களையும் வென்று 10ஆவது வருடமாகவும் முதலவிடத்தைப் பெற்றுள்ளது.

இந்தப் பாடசாலை இப்போட்டிகளில் மொத்தம் 510 புள்ளிகளைப் பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.







